

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

வைகாசி - ஆனி

ஆகஸ்ட் - 2019

மலர் 8 இதழ் 8

அ

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| Vedantic Prayer | 10 |
| அனுக்கிரஹ பாஷணம் | 11 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| திருக்குறள் நூற்றெட்டு | 15 |
| இராமாவதாரம் எதற்காக | 17 |
| தமிழ் பாகவதம் | 20 |
| ஸ்ரீ சிந்துநதி மஹாத்மியம் | 22 |
| குரு என்பவர் யார்? | 26 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 15 | 29 |
| புராணக்கதை | 26 |
| வேதாந்த ஸாரம் | 32 |
| ஆடி மாத விசேஷ தினங்கள் | 33 |
| ருத்ர கீதை | 34 |
| த்ரிபுரஸுந்தரீ பாதத்ஸ்தவம் | 36 |
| பித்ரார்ஜிதம் | 38 |
| மகாபாரத சுருக்கம் | 40 |
| ஹிந்து மத - ப்ராமண நூல்கள் | 43 |
| பக்தியே பெரிய லக்ஷ்மி | 45 |
| ப்ரஹ்லாதர் அசுர குழந்தைகளுக்குச் செய்த உபதேசம் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


### நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

டாக்டர் G. சங்கரநாராயணன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

### ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் ம.வே.பசுபதி

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



**வெளியிடுவோர் :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

**மின் அஞ்சல் :**

kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## காயத்ர்யா: ந பரமோ மந்த்ர:

நம் ஸனாதன தர்மம் மக்கள் உய்ய எத்தனையோ வழிகளை காண்பித்துள்ளது. கர்ம, பக்தி உபாஸனை, ஞான மார்கங்கள் என்று பல வழிகளை காட்டுகிறது. எந்த வழிக்கும் போகாதவர்களைத் தவிர்த்து பலரும் ஏதேனும் ஒருவழியை பின்பற்றுகிறார்கள்.

அவ்வழியே மோக்ஷம் தருமென்று உரைக்கிறார்கள். இது சரியா தவறா என்பது பற்றி இக்கட்டுரையின் நோக்கமன்று. நமது மதம் காண்பிக்கும் மார்க்கங்களை பின்பற்றுவதற்கு எந்த யோக்யதாம்சம் வேண்டும்? அதிகாரியானவன் அதன்படி நடக்கிறானா? அல்லது நடிக்கிறானா? அந்த யோக்யதாம்சம் என்ன? அது பற்றி பார்ப்போம்.

வாசகர்கள் கேட்கலாம். அது என்ன யோக்யதாம்சம் என்று. NEET, JEET, FLAB இப்படி பல நுழைவு தேர்வுகள் மாணவர்கள் படிப்பிற்கு போகும் முன் நடக்கின்றன. மாணவர்களும் சேர்கின்றனர், வெற்றி பெறுகின்றனர். அதுபோலவே எந்த ஒரு கர்மாவுக்கும் ஒரு யோக்யதாம்சம் வைத்துள்ளது. காயத்ரீ ஜபம் என்பதே அது. காயத்ரீ ஜபம் இல்லாமல் எந்த ஒரு கர்மாவும் வீண். இது எழுதப்பட்ட விதி. ஆனால் ஏனோ யாரும் பின்பற்றுவதில்லை. அந்தணர்களுக்கு வேதமாதா கொடுத்த அழியாத நிதி, சாஸ்வதமானது, புரோஹிதனாக காப்பது, ப்ரம்மத்தைக் காட்டிக் கொடுப்பது. இப்படி எவ்வளவோ சொல்லலாம். ஒரு காலத்தில் ஸஹஸ்ரகாயத்ரீ செய்பவர்கள் நிறைய இருந்தனர். அது இப்போது நூறு செய்பவர்களாக சுருங்கி விட்டது.

இன்னும் சிலர் ஸஹஸ்ரகாயத்ரீ சங்கல்பம் செய்துகொண்டு செய்கிறார்கள். இப்பேர்பட்ட நிதியை ஏன் அந்தணர்கள் கைவிட்டனர் என்பது தெரியவில்லை. HALDANE எனும் ஒரு பேராசிரியர் இம்மந்த்ரத்தை UNIVERSAL PRAYER என்று புகழ்ந்துள்ளார்.

படாடோபமாகவும், எளிமையாகவும், ஸமஷ்டி, வ்யஷ்டி இப்படி நிறைய ப்ரம்மோபதேசம் நடக்கின்றன. ஆனால் அவை முடிந்தவுடன் காயத்ரீ ஜபமும் முடிவுக்கு வந்துவிடுகிறது. வடுக்களின் பெற்றோர்களும் ஸந்த்யாவந்தனத்தைச் செய்விப்பதில்லை, வாத்யார்களும் செய்விப்பதில்லை. இதைவிட முக்யமானது இந்த

கர்மா எதற்கு? இந்த மந்த்ரத்தின் பொருள் என்ன? என்று யாரும் கேட்பதில்லை.

உபநயன நிகழ்ச்சி நடப்பதற்கு சில வாரங்களுக்கு முன் வடுக்களுக்கு உபதேசம் செய்வித்தால் அவர்களுக்கு ஆர்வம் வரும், தொடர்ந்து ஜபிப்பார்கள். ஓஜஸையும் பலத்தையும் தரும் வேதமாதாவை புறக்கணிக்கமாட்டார்கள். இது முக்யமான எந்த கர்மாவுக்கும் யோக்யதாம்சமாகும். நமது பலம் வீர்யம் தேஜஸ் என்று தெரியாமல் மக்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தம் பாதையில் இருந்து கொண்டு இதுவே போதும் ஜபமெல்லாம் வேண்டாம் என்று நினைக்கின்றனர். அன்னிய மதத்தினர் ஜபமே இல்லாதவர்கள் ஜபம் செய்யும்போது இந்த உயர்ந்த ஜப மந்த்ரத்தை நாம் விடலாமா? புறக்கணிக்கலாமா? வேறு எதுவுமே செய்யாவிட்டாலும் பரவாயில்லை காயத்ரீ ஒன்றே போதும் என்பார் மனு.

''காயத்ரி ஜபத்தால் ப்ராம்மணன் நிச்சயம் மோட்சமடைவான். வேறு வேள்விகளை புரிந்தாலும் புரியாவிட்டாலும் ஒன்றே. ஏனெனில் அவை அவனுக்கு கடமையாக இருப்பதில்லை.'' மகாபெரியவா கூறுகிறார் ''எவர்கள் தன்னை கானம் செய்கிறார்களோ அவர்களை காப்பவள் காயத்ரீ. ப்ரேமையுடன் பக்தியுடன் உச்சரிப்பது என்று பொருள். காயத்ரியில் ஸகல வேதமந்த்ர சக்தியும் அடங்கியிருக்கிறது. மற்ற எல்லா மந்த்ரங்களுக்கும் சக்தியைக் கொடுப்பது இதுதான். அதை ஜபிக்காவிட்டால் வேறு மந்த்ரஜபத்திற்கு சக்தியில்லை. இதை ஒரு வ்ரதமாகக் கொள்ளவேண்டும். காயத்ரியை சரியாகப் பண்ணினால்தான் மற்ற வேத மந்த்ரங்களிலும் ஸித்தி உண்டாகும். இது எல்லாராலும் ஆகிற கார்யம்தான். காயத்ரியை மாத்ரு ரூபமாக உபாஸிக்க வேண்டும்.

அவளை 'ஸந்தாஸாம் மாதா'' என்கிறது வேதம். பெண்களுக்கு புருஷன் ஜபிக்கும் காயத்ரீ க்ஷேமமுண்டாக்கும். மந்த்ரசக்தி அணையாமல் வ்ருத்தியாக க்ருபை செய்யவேண்டும் என்று பகவானை ப்ரார்த்திப்போமாக.'' (தெய்வத்தின் குரல் 2 851)

இதற்கு மேல் இம்மந்த்ரத்தின் உயர்வைப்பற்றி சொல்வதற்கில்லை. விஸ்வத்திற்கு நண்பனாகத் திகழும் ரிஷி விஸ்வாமித்ரரால் அருளப்பட்ட மந்த்ரம். மன ஒருமைப்பாட்டை நல்கும் மந்த்ரம், உலகம் முழுவதும் நன்மையுடன் விளங்க வாழ்விக்க வந்த மந்த்ரம் என்று சொன்னால் மிகையாகாது. ஆகையால் இந்த ஆகஸ்ட் 16ஆம் தேதி யிலிருந்தாவது ஜபத்தை செய்ய சங்கல்பம் செய்வோம், ஜபத்தையும் செய்வோம் என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற் பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



नासतो चिद्यते भावो नाभावो विद्यते सत: । 2.16.

ஸத் எனப்படும் ஆத்ம பொருளுக்கு இல்லாமையே கிடையாது. அதைத் தவிர வேறான தேகம் முதலிய 'அஸத்' பொருள்களுக்கு இருப்பே கிடையாது. அதாவது எங்கும் நிறைந்து அசைவற்று நித்யமாயுள்ள ஆத்மப் பொருளே உண்மைப் பொருள்; மற்றவை உண்மையல்ல; தோற்றம் அவைகளுக்கு உண்மைத் தன்மையே கிடையாது. ஆதலால் ஞான நூல்களின்படி ஆத்மா என்னும் பொருள் ஒன்றே என்றும் எக்காலத்தும் நிறைந்த உண்மைப் பொருள். இவ்விரு கொள்கைகளிலும் ஆத்மா சாகாதவன். அவனை சாகடிக்க முடியாது என்னும் உண்மை நிலை நிற்கிறது. தர்ம நூல்கள் சொல்லும் கொள்கையை அனுசரித்து ஒருவன் நடந்து வந்தால் ஞான நூல்களில் சொல்லப்படும் உண்மை நிலைக்கு (மோக்ஷ நிலைக்கு) அது தானாகவே கொண்டு வந்து விடும்.

பகவான் அர்ஜுனனைப் பார்த்து நீ இவ்விரு கொள்கைகளுக்கும் பொதுவான (ஆத்மா என்றும் சாவதில்லை எனும்) தீர்மானத்தை ஒப்பாமல் சரீரம் நாசமடையும் போது ஆத்மாவும் அழிந்து விடுகிறது என்று நினைத்தால் மறு ஜன்மத்திற்கிடமில்லை. ஆதலால், இவர்களைக் கொன்றால், நமக்குப் பாபம் வரும், யுத்தத்தால் குலக்ஷயம் ஏற்பட்டால் குலக்னர்களுக்கும், குலங்களுக்கும் நரகம் வரும் என்றெல்லாம் அழுகிறாயே, இவ்வித அழுகைக்குக் காரணமில்லை.

நம்மால் தடுக்க முடியாத விஷயத்தில் அழுதென்ன பயன்? புத்திமான் அழுவானா?

अथचैनं नित्यजातं नित्यं वा मन्यसे मृतम् ।
तथापि त्वं महाबाहो नैवं शोचितुमर्हसि ।। 2.26.

27வது சுலோகத்திலும் நீ அழுவது தகுதியல்ல என்கிறார் பகவான். கர்மமீமாம்ஸகர்கள் என்னும் சாஸ்திரக்காரர்கள், "பிறந்தவன் தனது கர்மங்களை செய்துவிட்டுச் சாவான். செத்தவன் தனது கர்மங்களுக்குத் தகுந்த பலன்களை அனுபவிக்கத் திரும்பவும் பிறக்கிறான். இவ்விதம் பிறந்து கொண்டும், இறந்து கொண்டுமிருக்கிறான். எல்லோரும் கர்மபலன்களை அனுபவிக்கலாமேயொழிய பிறவாத் தன்மை யென்னும் மோக்ஷம் கிடையாது." என்று சொல்லுவார்கள். அக்கொள்கையை நீ அனுசரித்தாலும்

जातस्य हि ध्रुवो मृत्युः ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्यर्थ न त्वं शोचितुमर्हसि ।। 2.27.

பிறந்தவன் சாகாதிரான். செத்தவன் பிறக்காதிரான். ஆகையால் தடுக்க முடியாத கார்யத்தில் ஏன் அழுகிறாய் என்கிறார் பகவான். (தேகமே ஆத்மா எனும் ஸோகாயதர்கள் மதத்திலும், கர்மங்களைச் செய்வதைத் தவிர பக்தி, த்யான, யோக ஞானங்கள் ஒன்றும் அவச்யமில்லை என்னும் கர்ம மீமாம்ஸகர்களின் சிலரின் மதத்திலுமே பிறப்பு, இறப்பு என்னுமிவை தடுக்க முடியாதவையாகின்றன. சாச்வதமான மோக்ஷ நிலையை இவ்விருவரும் ஒத்துக் கொள்ளாததால்),

28-வது ச்லோகத்திற்கு "எதற்கும் ஆரம்பம் தெரியவில்லை. அந்தவிடம் நமக்கு இருட்டாயிருக்கிறது. முடிவும் தெரியவில்லை. அங்கும் நமக்கு இருட்டாயிருக்கிறது. இடையில் சிலகாலமே அவை தெரிகின்றன. இவ்விதமான பிராணிகளின் விஷயத்தில் நம்மவர், சுற்றத்தார் அவர்கள் போகின்றார்கள் என்பது போன்ற அழுகைக் குரலுக்கு அர்த்தமுண்டா?" என்று கேட்கிறார் பகவான். இந்தச் ச்லோகத்தில் "ஒரு சாதாரண பொது மனிதனுடைய நிலையிலிருந்து பார்த்தாலும், நீ சோகப்படுவது சரியல்ல" என்கிறார். இவ்விதம் சாமானிய நோக்கைக் கொண்டு மூன்று ச்லோகங்களால் அவனைத் தேற்றிவிட்டு தாம் ஆரம்பித்த தத்வஞான விளக்கம் மறந்து போகாமலிருக்க 29வது ச்லோகத்தினால் ஆத்மாவின் உண்மை ஸ்வரூபத்தின் பெருமையையும் ஆச்சரியத்தையும் ஸ்துதி செய்து விட்டு

देही नित्यमवध्योयं देहे सर्वस्य भारत ।
तस्मात् सर्वाणि भूतानि न त्वं शोचितुमर्हसि ।। 2.30.

என்று ஆத்மஞான உபதேசத்தை ஒருவாறு முடிக்கிறார் பகவான். இரண்டாவது அத்தியாயத்தில் 25, 26, 27, 28, 30 இந்த ச்லோகங்களிலும், "நீ சோகமடைவது சரியல்ல" என்பதை பகவான் நானாவித காரணங்களைக் கொண்டு வற்புறுத்துகிறார். இரண்டாவது அத்தியாயத்தின் 2-வது ச்லோகத்தில் அர்ஜுனன் அப்பொழுது கொண்டிருந்த மனோநிலையை கடுமையாக கண்டித்த பொழுது अनार्यजुष्टम्; अस्वर्गियम्; अकीर्तिकरं என்ற மூன்று பதங்களை பிரயோகித்திருக்கிறார். "தர்மயுத்தத்திலிருந்து இவ்விதம் பின்வாங்குவது ஆர்யகுலமான உன்னுடைய க்ஷத்திரிய குலத்திற்கே அழகன்று" என்ற கருத்துடைய 31-வது ச்லோகத்தால் अनार्यजुष्टं என்ற பதத்தின் பொருளை விவரிக்கிறார். 33 முதல் 36 வரையுள்ள ச்லோகங்களினால் अकीर्तिकरं என்பதன் பொருளை விவரிக்கிறார்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அஷ்டாவக்கிரன்

***"அறிவு வயதால் அளக்க முடியாதது. தணலின் ஒரு பொறிக்கும் பொசுக்கின்ற ஆற்றல் உண்டு" - ஸுபாஷிதம்***



ஜனகரின் அரசவையில் வாதவிவாதங்கள் அடிக்கடி நடக்கும். அவரது ஆஸ்தான பண்டிதர் பந்தீ. அவர் தன்னிடம் வாதில் தோற்றவர்களைக் கடலில் உயிருடன் எறிந்து விடுவார். அப்படி கடலில் தள்ளப்பட்டவர்களில் கஹோளரும் ஒருவர். கஹோளரின் புதல்வன் அஷ்டாவக்கிரன் அவனது உடலில் எட்டு கோணல்கள். பார்ப்பதற்கு விகாரமாகத் தோன்றுவான். சிறுவயதிலேயே தனது மாமனான உத்தாலகரிடம் கல்வி கற்று அறிவில் நிறைந்தவனானான்.

தந்தை அரசவையில் தோற்றுக் கடலில் எறியப்பட்டார் என்று கேட்டதும் சினத்துடன் சிறுவனான அஷ்டாவக்கிரன் அரசவைக்குச் சென்றான். அறிவாளிகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சிறுவனுக்குத் தகுதியில்லை என வாயிற்காப்போன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

"நான் வயதால் சிறியவனாயினும் அறிவால் முதிர்ந்தவன். நெருப்புப் பொறியை சிறியது என உதாசீனப்படுத்தினால் அது ஊரையே கொளுத்தி விடக் கூடும். பழம் தரும் சிறு செடி, காய்க்காத பெருமரத்தைவிட மேலானதே" என அவனுடன் சிறுவன் வாதிட்டான். வாயிற்காப்போன் சிறுவனது ஒளிமிக்க முகத்தையும் வாக்குத் திறமையையும் மதித்து உள்ளே அனுப்பினான்.

அரசவையில் வீற்றிருந்த பண்டிதர்கள் வாதிட வந்த சிறுவனது வடிவத்தைக் கண்டு நகைத்தார்கள். சிறுவன் அவர்களது அறியாமையைக் கண்டான். "அரசே! அறிவாளிகள் நிறைந்த ஸபை என நினைத்து இங்கு வந்தேன். இங்குள்ளவர்கள் தோல் வியாபாரிகள்

போலும். தோலைக் கண்டு அதனுள் உள்ள தசை எலும்புகளின் அமைப்பைக் கண்டு என்னை அளவிடுகிறார்கள். என் அறிவைத் தமது அறிவால் கண்டறிகின்ற தகுதி இவர்களிடம் காணோம்'' என்றான். அரசர் ஜனகர் இதனைக் கேட்டு வியந்தார். மற்ற பண்டிதர்களும் தலை குனிந்தார்கள்.

அரசரின் ஆஸ்தான பண்டிதரோடு தான் வாதிட வந்துள்ளதாக அஷ்டாவக்கிரன் தெரிவித்ததும் பந்தீ வரவழைக்கப்பட்டார். பந்தியின் கேள்விகளுக்குச் சிறுவன் உடனுக்குடன் விடை தந்தான். சிறுவனது கேள்விகளுக்குப் பந்தியால் சரியான விடையை தர முடியவில்லை. பந்தி தான் தோற்றுவிட்டதை உணர்ந்து தலைகுனிந்தான்.

அஷ்டாவக்கிரன் அரசரிடம் பந்தி மற்றவர்களுக்குத் தந்த தண்டனையைப் பந்திக்கும் அளிக்கும்படி வேண்டினான். அரசர் அதனை ஏற்று அவரைக் கடலில் எறிய உத்தரவிட்டார். பந்தி உடனே அஷ்டாவக்கிரனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். ''வருணதேவனுக்குப் பிரதிநிதியாக நான் இங்கு வந்தேன். வருணதேவன் ஒரு வேள்வி நடத்துகிறார். அந்த வேள்வியை நடத்தத்தக்கவர்களை வருண லோகம் அனுப்பவே அவர்களைக் கடலில் எறிந்தேன். வருணனின் வேள்வி முடிந்து விட்டது. கஹோளரை உடன் இங்கு வரவழைக்கிறேன்'' என்று அடக்கத்துடன் கூறினார். கஹோளர் முதலானோர் திரும்பி வந்தனர்.

கஹோளர் தன் புதல்வனைக் கண்டு மகிழ்ந்தார். தன் குலத்திற்குப் பெருமை தருபவனே உயர்ந்த புதல்வன். தன்னால் இயலாததைத் தன் புதல்வன் நிறைவேற்றக்கூடும் என்ற எதிர் பார்வையுடனேயே புதல்வர்களைத் தன்னைவிட அறிவாளிகளாக்கும் பணியில் பெற்றோர் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். அவர்களது முயற்சியைப் பயனுள்ளதாக்குகின்ற புதல்வன் கடமையிற் சிறந்தவனாகிறான்.

# செருக்கு நிலை குலையச் செய்யும்

***''அதிகாரச் செருக்கும் செல்வச் செருக்கும் கல்விச் செருக்கும் அழகுச் செருக்கும் நிலைகுலையச் செய்யும் செருக்கு படு குழியில் தள்ளிவிடும்'' -***

அமுதம் பெற வேண்டித் தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அசுரர்கள் அப்போது மூவுலகத்தையும் ஆண்டு வந்ததால், ஒவ்வொரு பணியிலும் தனக்கு முன்னுரிமை கொண்டாடினர். வாசுகி என்ற பாம்பரசனை கயிறாக்கி மந்தரமலையை மத்தாக்கி வாசுகியாய் அதனைச் சுற்றி கடலை கடைந்தனர். வாசுகியின் தலைப் பக்கத்தை யார் பிடிப்பது? வால் பக்கத்தை யார் பிடிப்பது என்பதில் போட்டி ஏற்பட்டது. அசுரர்கள் தாம் செல்வாக்கில் இருப்பதனால் தலைப் பக்கத்தைப்

பிடிப்பதாகவும், தேவர்கள் பதவியிழந்து நிற்பதால் அசுத்தமான வால் பக்கத்தைப் பிடிக்க வேண்டுமென்றும் உரிமையுடன் வற்புறுத்தினர். தேவர்கள் வேறு வழியின்றி சம்மதித்தனர்.

கடையத் தொடங்கியதும் பெருமலையைச் சுழற்றுவதில் வாசுகி களைப்படைந்து பெருமூச்சு விட்டது. அதன் மூச்சுக் காற்றின் வழியே அதன் கருவிஷமும் வெளியாகியது. விஷத்தால் அசுரர்களின் உடல் கறுத்தது. உள்ளம் கலங்கியது. அசுரர்கள் தமது தற்பெருமையால் தாமே தமக்குத் துன்பத்தை விளைவித்துக் கொண்டதை உணர்ந்த போதிலும் டம்பத்தால் பிடிவாதமாக பாம்பின் தலையைப் பிடித்து இழுத்து வந்தனர். தேவர்கள் ஒரு துன்பமின்றி வாலைப் பிடித்து இழுத்தனர். வீம்புடன் செயல்பட்ட அசுரர்கள் களைக்கத் தொடங்கினர். பகவான் நாராயணன் பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற வேண்டியிருப்பதை உணர்ந்து அசுரர்களின் களைப்பை நீக்கிச் சுறுசுறுப்பைத் தந்தார். அசுரர்களின் இறுமாப்பு இதனால் ஓரளவு குறைந்தது.

பொதுப்பணியில் ஏற்றத்தாழ்வு காண்பது அறியாமை. இந்தப்பணி தனது நிலைக்கு ஏற்றதல்ல என ஒதுங்குவது நல்லதல்ல. கஷ்டத்தில் முழுப் பங்கேற்பதன் மூலமே இன்பத்தில் முழுப் பங்கைப் பெற முடியும்.

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜூலை விடைகள்

1. சீதாபிராட்டியின் ஜன்மதினம்
2. திருப்பாற்கடல் க்ஷேத்ரம்
3. கொல்லூர்
4. காஞ்சீ வரதராஜப்பெருமாள்
5. திபெத் அக்சி க்லேசியர்
6. ஸ்ரீ வித்யாரண்யர்
7. யஞ்யம் (வேள்வி)
8. சிவபெருமான்
9. பராசரபட்டர்
10. ராமேஸ்வரம்

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஆகஸ்ட் வினாக்கள்

1. உச்சி வெயில் முகூர்த்ததிற்கு பெயொ் என்ன?
2. அம்பாளின் பீஜாக்ஷரத்துடன் உள்ள 300 நாமாக்கள்.
3. முப்புரங்களின் அதிபதியான அரக்கர்கள்
4. அம்பாளின் மகாசக்திபீடம்
5. மந்த்ரத்தை ஜபிக்கும் முறைகள் எத்தனை?
6. அக்ரூரரின் பெற்றோர் யார்?
7. க்ருஷ்ணருக்கு இதனால் அபவாதம் வந்தது
8. விபண்டகரின் புதல்வர் யார்?
9. திரு ஞ்யான ஸம்பந்தருக்கு முத்துபல்லக்கு கிடைத்த இடம்
10. இந்த்ரனை வழிபடும் நாள்.

# VEDANTIC PRAYER

## SRUTIGITA

इत्यशेषसमन्नायपुराणोपनिषद्रस : ।

समुद्धृतः पूर्वजातैर्व्योमयानैर्महारमभिः ।। ३२

त्वं चैतद्ब्रह्मदायाद श्रद्धयाऽत्मानुशासनम्

धारयंश्चर गां कामं कामानां भर्जनं नृणाम् ।। ३३

इति thus त्रशेष समाम्नाय पुराणेपनिषद्रसः the very essence of all the spiritual laws (the Vedas), Puranas, Upanisads etc., व्योमयानैः महात्मभिः by sages of spiritual eminence whose minds always dwelt on God. (lit. who never touched the world) पूर्वजातैः ancient समुद्धृतः was gathered together.

ब्रह्मद् O heir to Vedas or spirituality त्वं च you also नृणां of man कामानां desires of the heart भर्जनं which destroys of fires एतत् this त्रात्मानुशासनं teaching of *atman* श्रद्धया with faith and devotion धारयन् understanding and practising कामं as you please गां on the earth चर live (lit. move on)

32. *ityalesa - samannaya - puranopanisad*
*rasah*
*samuddhr tah purvajatar - vyomayanair*
*mahatmabhih*
*33. tvah caitad brahmadayada sraddhayat*
*mansasanam*
*dharayamscara gam kamah kamanam*
*bharjanam nrnam*

Gathered together in this poem are the universal principles, the very essence of the teaching of the Vedas, the Upanisads, and the Puranas, as taught by sages of spirutual eminence, whose minds always dwelt on God.

You, O reader, are heir to this spiritual wisdom. Realize this teaching of the truth of the atman and live in freedom and bliss. This realization alone can burn to ashes the desires of the human mind and fill it with the faith that grasps the Truth, with understanding, and with the ability to carry this teaching into practice.

# அநுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஹிராநந்தானி மக்கள் குடியிருப்பு விஜயம்- அனுக்ரக பாஷணம்

*வைகாசி மாதம் 11ம் தேதி, மே மாதம் 25 , 2019*



*ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள் - சென்ற இதழின் தொடர்ச்சி*

*26.06.19 அன்று திருவானைக்காவல் சங்கரமடத்தில் ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரர் பூஜையை முடித்துக் கொண்டு கரூர் மாவட்டம் கண்ணமுத்தாம்பட்டி கிராமத்தில் சமீபத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட ஸ்ரீ அன்ன காமாக்ஷி அம்மன் ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள். இந்த கிராமம் யாதவாள் சமூகத்தினர் வசிக்கும் கிராமம். அவர்கள் குலதெய்வம் அன்னகாமாக்ஷி. இந்த சமூகத்தினர் கோசேவையில் அதீதமாக ஈடுபட்டவர்கள் என்பது ப்ரபலம் ஆகவே கோவில் வழிபாட்டுடன் 100 பசுக்களுக்கு மேல் கோபூஜை நடத்தப்பட்டது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தனது அனுக்ரஹ பாஷணத்தில் குழந்தைகளிடம் தர்மசிந்தனையை வளர்க்க வேண்டும். தெய்வ பக்தி வளர வேண்டும். ஆடம்பரத்தை தவிர்த்து பெரியவர்களிடம் மரியாதையாக இருக்க வேண்டும் போன்ற கருத்துக்களை எடுத்துரைத்தார்.*

*கண்ணமுத்தாம்பட்டியிலிருந்து திரும்புகையில் திருச்சியில் உள்ள நாகசுப்ரமண்ய ஸ்வாமி கோயிலுக்கு விஜயம் செய்து திருவானைக்காவல் ஸ்ரீமடத்திற்கு இரவு 11.00 மணி அளவில் வந்து இரவு தங்கி மறுநாள் 27.06.2019 அன்று தஞ்சாவூர் சாஸ்திரா பல்கலைகழகத்திற்கு விஜயம் செய்தார்கள்.*

*27.06.2019 வியாழன் முதல் 30.06.2019 மதியம் வரை சாஸ்திரா பல்கலைக் கழக வளாகத்தில் ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரர் பூஜை நடந்தது. 30.06.2019 நடந்த வேத சம்மேளனத்தில் அல்லூர், பாலூர், திருவானைக்காவல், இளையாத்தங்குடி, மெலட்டூர், களஞ்சேரி, சிறுகமணி, கும்பகோணம் ராஜா வேதபாடசாலைகளிலிருந்து சுமார் 220 வித்யார்த்திகளும் 30-35 அத்யாபகர்களும் கலந்து கொண்டார்கள். பாடசாலை வித்யார்த்திகள் பல்கலைக்கழகத்தில் உள்ள 3ஈ, நானோ, ஏரோஸ்பேஸ் ஆகிய ஆய்வகங்களைக் கண்டு களித்தார்கள். முகாம் மற்றும் பூஜைக்கான ஏற்பாடுகளை சாஸ்த்ரா பல்கலைக்கழக சேர்மன் திரு. சேதுராமன் மிகுந்த சிரத்தையுடன் செய்திருந்தார்கள்.*

*30.06.2019 ஞாயிறன்று மதியம் கேம்ப் தஞ்சாவூர் ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன் கோவிலை அடைந்து, அன்று மாலை பிரதோஷ பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். 01.07.2019 திங்களன்று காலை 6.30 மணி அளவில் ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மனுக்கு ஸ்ரீ சக்ர வடிவத்தில் ஆபரணத்தை அணிவித்து விசேஷ தீபாராதனை செய்தார்கள். பிறகு வீரராகவ மேல்நிலைப் பள்ளியின் விரிவாக்கத்திற்கு பூமி பூஜையை நடத்தி வைத்தார்கள்.*

*02.07.2019 மூன்று கால பூஜையை முடித்துக் கொண்டு அன்று இரவு திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீ பி.எஸ்.சிவஸ்வாமி அய்யர் அறக்கட்டளை மேல்நிலைப் பள்ளியில் முகாமிற்கு வந்தடைந்தார்கள். 03.07.2019 மற்றும் 04.07.2019 திருக்காட்டுப் பள்ளியில் பூஜை.*

*04.07.19 அன்று திருக்காட்டுப்பள்ளி அக்னீஸ்வர ஸ்வாமி கோவிலுக்குச் சென்று கோவில் மரியாதைகளுடன் வரவேற்கப் பட்டு, விசேஷ பூஜை ஆராதனை செய்தார்கள். அம்மன் சந்நிதியில் அனுக்ரஹபாஷணம் நடந்தது.*

*அங்கிருந்து புறப்பட்டு நடுக்காவேரி கிராமம் விஜயம் செய்தார்கள். பிரசன்ன மஹாகணபதி கோவிலில் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்ட ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அக்ரஹாரம் முழுவதும் நடந்தே வந்தார்கள். ஸ்ரீ லக்ஷ்மி நாராயண ஸ்வாமி கோவிலில், பட்டாச்சார்யார்கள் (வைகானஸம்) கோவில் மரியாதையுடன் வரவேற்கப்பட்டு விசேஷ பூஜை, தீபாராதனை நடத்தப்பட்டது. முடிவாக விநாயகர் கோவில் வந்தடைந்தார்கள். அங்கிருந்து மாரியம்மன் கோவில் வந்தார்கள். வழிநெடுக ஏராளமான பக்தர்கள் திரண்டு தர்சனம் செய்ததோடு மட்டுமல்லாமல் பூர்ண கும்ப மரியாதையம் செய்தார்கள்.*

அங்கிருந்து புறப்பட்டு மேல்குமாரமங்கலம் நோக்கி முகாம் கிளம்பியது. வழியில் பண்ருட்டியில் ஹயக்ரீவர் கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். இரவு 10.30 மணிக்கு மேல் ஆகியிருந்தாலும் திரளான பக்தர்களும், ஆர்ய வைச்ய சமூகத்தினரும் காத்திருந்தார்கள். அர்ச்சகர் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்று தர்சனம் செய்தார்கள். முகாம் மேல்குமாரமங்கலத்திற்கு 04.07.2019 வியாழன் இரவு 11.00 மணியளவில் வந்து சேர்ந்தது.

05.07.19 வெள்ளி மற்றும் 06.07.19 சனியன்று மேல்குமாரமங்கலத்தில் சிவன் கோவில் வளாகத்தில் பூஜை. மிகச்சிறிய கிராமமாக இருந்தாலும் ஆயிரக்கணக்கான கிராமவாசிகள் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வரர் பூஜையை தரிசனம் செய்தார்கள். முகாமிற்கான ஏற்பாடுகளை கிராமத்தைச் சேர்ந்த பம்பாய்வாசி ஸ்ரீ ராகவன் குடும்பத்தினர் செய்திருந்தனர். இந்த கிராமத்தைப் பூர்விகமாகக் கொண்டுள்ள தற்சமயம் தமிழக அரசில் தொழில்துறை அமைச்சராக உள்ள திரு.எம்.சி.சம்பத் குடும்பத்தினர் இரண்டு தினங்களிலும் காலையிலிருந்து இரவு வரை சிறப்பாக அன்னதானம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

06.07.19 அன்று இரவு ஆத்தூர் பாடசாலையை அடைந்து 07.07.19 ஞாயிறனற்று மூன்று கால பூஜையை பாடசாலையில் முடித்துக்கொண்டு அன்று இரவு காஞ்சிபுரம் அருகே உள்ள தேனம்பாக்கம் ப்ரம்மபுரீஸ்வரர் கோவில் வளாகத்திற்கு வந்தடைந்தார்கள்.

08.07.19 முதல் 11.07.19 வரை தேனம்பாக்கத்தில் முகாம். 10.07.19 புதன்கிழமை மாலை காஞ்சீபுரம் வரதாஜ பெருமாள் கோவிலில் ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்தார்கள். கோவில் பட்டாச்சார்யார்கள் சிறப்பாக தரிசனம் செய்வித்து சால்வை அணிவித்து மாலை மரியாதை செய்தார்கள். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அத்திவரதருக்கு சாமரம் வீசி ஆராதனை செய்தார்கள்.

11.07.19 மாலை தேனம்பாக்கத்திலிருந்து புறப்பட்டு இரவு 8.00 மணி அளவில் சென்னை ஆழ்வார்பேட்டை ஆஸ்திக சமாஜத்திற்கு வந்தடைந்தார்கள். ஆழ்வார்பேட்டை சிக்னல் அருகேயிருந்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பூர்ணகும்ப மரியாதையுடன் ஏராளமான பக்தர்கள் புடைசூழ, வேதகோஷம், மங்கள வாத்யங்கள் முழுங்க ஆஸ்திக சமாஜம் அடைந்தார்கள். 12.07.19 வெள்ளி முதல் ஆஸ்திக சமாஜத்தில் பூஜை.

16.07.2019 அன்று செவ்வாய் வியாசபூஜை வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் பூஜையைக் கண்டு களித்தார்கள். வியாஸ பூஜை மதியம் 3.00 மணியளவில் முடிந்து பக்தர்கள் எல்லோருக்கும் சமாராதனை செய்விக்கப்

பட்டது. அன்று இரவு சந்திர கிரஹணம் உத்திராட நக்ஷத்ரத்தில் கிரஹணம் பிடித்ததால் 17.07.2019 அதிகாலை 1.30 முதல் 4.30 வரை ஜபம் செய்து விசேஷ தானங்கள் செய்யப்பட்டது.

17.07.19 செவ்வாயன்று சந்திரமௌலீச்வர பூஜைக்குப் பிறகு வியாஸபூஜை புனர்பூஜை செய்யப் பட்டது. பிறகு எல்லோருக்கும் வியாஸ அக்ஷதை அனுக்ரஹம் செய்தார்கள். பாஷ்ய பாடம் 2வது நாளாக நடத்தப்பட்டு ப்ரதி தினமும் காலை 8.00 மணி அளவில் நடக்கும் ப்ரம்மஸ்ரீ முல்லவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் பிரதானமாக பங்கேற்கிறார்கள்.

சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆஸ்திக சமாஜத்தில் தங்கி பூஜைகள் மேற்கொண்டிருப்பார்கள்.

ஜூலை மாதம் 20ம் தேதி தொடங்கி 22ம் தேதி வரை 3 நாட்கள் பஞ்சாங் சதஸ் நடைபெற்றது. இந்த சதஸில் 10 வேதவித்வான்கள், 25க்கும் மேற்பட்ட பஞ்சாங்க கர்த்தர்கள் பங்கேற்றனர். ஆந்திரா, கர்நாடகா மற்றும் இலங்கையிலிருந்தும் பஞ்சாங்க கர்த்தர்கள் வந்திருந்தார்கள். சார்வரி வருஷத்திய பஞ்சாங்கம் நிர்ணயம் செய்யப்பட்டது. 22ம் தேதி பஞ்சாங்க சதஸின் இறுதியில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பங்கேற்று வழி காட்டினார்கள். வித்வான்களும், பஞ்சாங்க கர்த்தர்களும் தக்கபடி கௌரவிக்கப்பட்டார்கள்.

தொடரும்

॥ ஸ்ரீ: ॥
இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.
பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை
Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி
எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.
க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்
எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.
(Transliteration in all Languages done here.)
Grantham to Devanagiri, Grantham to Tamil,
மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்
உதாத்தம், அனுதாத்தம் இவற்றுடன்
அச்சிட்டு தரப்படும்.
Contact : V.K.N. Enterprises (Printer)
Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

**89. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன் மூவர்
சொற்றொக்க தேறப் படும்**

*ஒற்று = ஓர் ஒற்றன், ஒற்று = மற்றோர் ஒற்றனை, உணராமை = அறியாமல், ஆள்க; மூவர், உடன், சொல், ஒக்க = ஒத்திருக்க, தேற = தெளிதல், படும் = பெருந்தும்.*

*சொல்லொக்க என்பது சொற்றொக்க என விகாரப்பட்டது எனலாம்.*

*ஒற்று என்பது ஒற்றன் என்பதன் கடைக்குறை.*

*அரசனால் ஏவப்படும் ஒற்றர்கள் ஒருவர்க்கொருவர் ஒற்றர் என அறியாமல் இருக்குமாறு அரசன் ஜாக்ரதையாய் இருக்க வேண்டும் என்பதும், மூன்று ஒற்றர்கள் ஒரேவிதமாய் ஒரு பொருளைக் கூறின் அதனை உண்மையென அரசர் அறிந்து கொள்ளலாம் என்பது மகாபாரதம் சாந்திபர்வம் 108வது அத்யாயம் 8 முதல் 10 வரை அர்த்தசாஸ்த்ரத்தை (12) வாக்கியமும் கூறுவதைக் காண்க.*

**90. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தா அய தெல்லா மொருங்கு**

*அடியளந்தான் = அடியால் (உலகங்களை) அளந்த வாமனர், தாயஅயது எல்லாம் = அளந்த எல்லாவுலகங்களையும், ஒருங்கு = ஒரே காலத்தில் மடியிலா மன்னவன் = சோம்பல் இல்லாத அரசன், எய்தும் = அடைகிறான்.*

*தாயது என்பது தாவியது என்பதன் இடைக்குறை. மகாவிஷ்ணு மூன்று உலகங்களையும், மூன்று அடிகளையும் அளந்தனர் என்பது ருக்வேதம் முதல் மண்டலம் 154வது சூக்தத்திலும், மகாவிஷ்ணு வாமன ரூபத்தைக் கொண்டு பலியினிடத்தில் யாசித்து மூன்று உலகங்களையும் ஆக்ரமித்தனர் என்பது ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், பாலகாண்டம் 29 வது சர்க்கத்திலும், ஸ்ரீமத் பாகவதம் 8வது ஸ்கந்தம் 18-2 அத்யாயங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.*

இவ்வாசிரியர் அத்வைதானுபவி என்பது அறத்துப்பாலிலுள்ள பல குறள்களினால் வெளியப்படையாய் அறியப்படுகிறது. அதோடு ஸகுணோபாஸனா விஷயத்தில் அடிக்கடி அடியளந்தான், உலகளந்தான் என்ற சொற்களால் கடவுளைக் குறிப்பதால் இவர் வானம மூர்த்தியை உபாஸிப்பவர் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறத.

## 91. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்

முயற்சி, திருவினை = செல்வத்தை, ஆக்கும் = உண்டாக்கும்; முயற்றின்மை = முயற்சியின்மை, இனிமை = திருவின் இன்மையை, புகுத்திவிடும் = கொண்டுவரும்.

மக்கள் ஒவ்வொருவரும் நம்மால் இயன்றவரை ப்ரயத்தினம் செய்ய வேண்டும் என்பது கருத்து. மக்களின் நிலைக்குக் காரணம் தைவம் மாத்திரமே யன்றி புருஷப்ரயத்தினரும் ஆகும் என்பது இதனால் அறியப்படுகிறது. இக்கருத்தினையே சேனாவரையர் முயற்சியும் தெய்வமுமாகிய காரணங்களுள் எனத் தொல்காப்பியம் சொல்லதிகாரம் 242 வது சூத்திரத்தின் உரையிற் கூறுகின்றார்.

### நல்லாசிரியர் மறைந்தார்



காமகோடி ப்ரதீபத்திற்கு பல நல்ல கட்டுகளை அளித்தவரும், நல்லாசிரியராக பல வருடம் பணியாற்றியவரும், நல்ல சிந்தனை உடையவருமான ஸ்ரீவீராபுரம் ஸம்பத் தீக்ஷிதர் க டந்த மாதம் எம்பெருமான் திருவடிகளைச் சேர்ந்தார் என்பது வருத்ததிற்குரிய விஷயம்.ஜாதஸ்ய த்ருவோ ம்ருத்யு:என்னும் உண்மையை உணர்ந்து சமாதானப்படுத்திக்கொள்வோம். ரிடையர் ஆனவர்கள் எப்படி வாழவேண்டும் எனபதற்கு அவர் ஒரு நல்ல உதாரணம்.

தன் பென்ஷன் தொகையைச் செலவிட்டு சின்ன சின்ன நூல்களை பதிப்பித்தவர். அவரும் நானும் சேர்ந்து ''வேதாந்த சபா'' என்று ஒரு சபையை ஏற்படுத்தி அதன் மூலம் பகவத்கீதை, தசோபனிஷத்கள் பற்றி சுமார் இரண்டு வருடங்கள் நடத்தினோம். ஸம்ஸ்க்ருத ஆர்வலர், அதே சமயம் தமிழில் வல்லவர். ராமபக்தர். ராமாயண சொற்பொழிவாளர். ஆண்டாள் பாசுரங்களை ஆழ்ந்து படித்தவர்.

ஒரு நல்ல வித்வானை காஞ்சீபுரம் இழந்துவிட்டது. அவருடைய ஆன்மா சாந்தி அடைய ப்ரார்த்திக்கிறேன்.

ஆசிரியர்

# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்



பம்பா நதிக்கரையில் ஒரு அற்புதமான ஆஸ்ரமம் இருக்கிறது. ராமன் லக்ஷ்மணனுடன் அங்கு சென்றான்.

**தௌ த்ருஷ்ட்வா து ததா ஸித்தா சமுத்தாய க்ருதாங்கலி: பாதௌ ஜக்ராஹ ராமஸ்ய லக்ஷ்மனஸ்ய தீமத: ।।**

அவர்களிருவரும் தன் ஆஸ்ரமம் வருவதைக் கண்ட சபரீ எழுந்திருந்து அஞ்சலி செய்து அவர்களின் பாதங்களைப் பற்றிக் கொண்டாள். விருந்தினரை எழுந்து நின்று வரவேற்க வேண்டும் என்பது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். ராமன் சபரியைப் பார்த்துக் கேட்பான்.

**கச்சித் தே நிர்ஜிதா; விக்னா:கஸ்சித் தே வர்ததே தப:**
**கச்சித் தே நியத; கோப;ஆஹாரச்ச தபோதனே''**

அம்மணி உமது விக்னங்கள் ஜயிக்கப்பட்டனவா? உமது தவம் வளர்கிறதா? தாங்கள் உணவையும் கோபத்தையும் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளீர்களா? நாவடக்கம் என்று சொல்வார்கள். நாக்கு சுவையையும் சுவைக்கும், பேசவும் செய்யும். உணவிற்கு ஏற்றார்போல் குணம் அமையும், அதற்கு ஏற்றார்போல் பேச்சும் அமையும். அதனால் தான் நாவடக்கம் தேவை என்பார்கள்.

**கச்சித் தே நியமா ப்ராப்தா:கச்சித் தே மனஸ ஸுகம்**
**கச்சித் தே குரு சுஷ்ருஷா ஸபலா சாருபாஷிணீ ।।**

உமக்குக் கிடைக்க வேண்டியது கிடைத்ததா ? உமது மனம் சுகத்தை அடைந்ததா? குருக்களின் சேவை ஸபலமானதா? ராமன் கேட்ட கேள்விகளுக்கு சபரீ விடை பகர்கிறாள்.

**அத்ய ப்ராப்தா தப: ஸித்தி;தவ ஸந்தர்சனாத் மயா**
**அத்ய மே ஸபலம் ஜன்ம குரவஸ்ச ஸுபூஜிதா:'' ।।**

என்னுடைய தவம் உமது தர்சனத்தினால் சித்தியாயிற்று, என் ஜன்மமும் ஸபலமாயிற்று, குருக்களும் பூஜிக்கப்பட்டனர்.

**சித்ரகூடம் த்வ்யி ப்ராப்தே விமானைரதுலப்ரபை:**
**இதஸ்தே திவ்யாரூடா யானஹம் பர்யசாரிஷம் ।।**

நீங்கள் சித்ரகூடம் வந்தபோது யாருக்குப் பணிவிடை செய்துவந்தேனோ அவர் ஒளியுடன் கூடிய விமானத்தில் தேவ லோகம் சென்றார். (அவள் குறிப்பிடுவது மதங்க முனிவரை)

**தைச்சாஹம் உக்தா தர்மஞ்யைர் மஹாபாகை:மஹர்ஷிபி:**
**ஆகமிஷ்யதி தே ராம:ஸுபுண்யம் இமமாஸ்ரமம் ।।**

அந்த ரிஷிகளும் தர்மாத்மாக்களும் இந்த ஆஸ்ரமம் மிகவும் புண்யம் செய்துள்ளது. இங்கு உன்னைக் காண ராமர் வரப்போகிறார் என்றார்கள்.

**ஸ தே ப்ரதிக்ருஹீதவ்ய: ஸௌமித்ரிஸஹிதொ அதிதி:**
**தம் ச த்ருஷ்ட்வா வரான் லோகான் அக்ஷயம் ஸத்வம்கமிஷ்யஸி ।।**

லக்ஷ்மணனுடன் வரும் அவரை நீ விருந்தாளியாக வரவேற்க வேண்டும். அவரைக் கண்ட நீ அழியாத உலகங்களை அடைவாய்.

**ஏவமுக்தா மஹாபாகை: ததார்ஹம் புருஷர்ஷப**
**யோ து ஸன்சிதம் வன்யம் விவிதம் புருஷர்ஷப ।।**

ஆண்களின் காளையே அவர்களால் இப்படி சொல்லப்பட்ட நான் பலவகையான உணவு பொருள்களை தங்களுக்காக சேர்த்து வைத்துள்ளேன்.

**தவார்தே புருஷவ்யாக்ர பம்பாயாஸ்தீர ஸம்பவம் ।**

பம்பையின் தீரத்தில் உண்டாகும் உணவு பொருள்களை உமக்காக எடுத்து வைத்துள்ளேன். இதனைக் கேட்ட ராமன் சொல்லலுற்றான்.

**ராகவ: ப்ராஹ விஞ்யானே தாம் நித்யம் அபஹிஷ்க்ருதாம்**
**தனோ சாக்ஷாத் தத்வேன ப்ரபாவம் தே மஹாத்மனாம் ।।**

அவளைப் பார்த்து தனுவை சந்தித்ததால் உமது மேன்மையை அறிந்து கொண்டேன். ஸ்ருதம் ப்ரத்யக்ஷம் இச்சாமி ஸம்த்ருஷ்டும் யதி மன்யஸே

கேள்விப்பட்டதையெல்லாம் நேரில் பார்க்க விழைகிறேன். அதற்கு நீங்கள் உடன்பட்டால். இதைக்கேட்ட சபரீ அந்த வனம் முழுவதையும் அவர்களுக்குக் காட்டினார். மதங்கவனம் முழுவதும் அன்று எப்படியிருந்ததோ அப்படியே பொலிவு மாறாமல் இருந்தது. ( சபரீ தான் சுவைத்து ஆகாரங்களை ராமனுக்குத் தந்ததாக சிலர் கூறுவர். அதற்கு மூலத்தில் ஆதாரமில்லை)

பின்பு அவள் கூறுவாள். யாருக்காக நான் தொண்டு செய்து வந்தனோ அந்த மகாத்மாவைச் சேர விரும்புகிறேன், இவ்வுடலை விட விரும்புகிறேன். இதைக் கேட்ட ராமன் மிகவும் மகிழ்ந்து

**''அர்சிதோஹம் த்வயா பத்ரே கச்ச காமம் யதாஸுகம்''**

பத்ரே நான் உம்மால் பூஜிக்கப்பட்டேன். உமது விருப்பப்படி செல்லுங்கள். ராமனால் அனுமதிக்கப்பட்ட சபரீ தீமூட்டி அதில் அர்பணித்துக் கொண்டாள். திவ்ய சரீரம் பெற்றவளாய் மின்னல் போல் ப்ரகாசத்துடன் மகரிஷிகளின் இருப்பிடத்திற்குச் சென்றாள்.

மதங்க முனிவர் சொன்னபடி ராமனுக்கு விருந்தோம்பலை தந்து ஸ்வர்கம் ஏறினாள் சபரீ. இதைச் சொல்வதற்குத்தான் பகவான் விஷ்ணு தன்னை தசரத மகனாக நினைத்துக் கொண்டார்.

இனி அடுத்த காரணத்தைப் பார்ப்போம்.

(தொடரும்)

## கலை(ந்த)ச் சொற்கள்
## ஜூலை விடைகள்

1. அத்தி வரத வைபவம்
2. நலமும் வளமும்
3. பொங்குமாற்கடல்
4. ஆபயன் குன்றும்
5. வாழிய செந்தமிழ்

## கலை(ந்த)ச் சொற்கள்
## ஆகஸ்ட் வினாக்கள்

1. நகுசிடிச்டனடிம்பு
2. சிமுசர்பிதாகயள்
3. கோமாரம்ச
4. சாவாஃயஸ்தம்மி
5. புவேந்தஷ்கதாம்ர

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

11. நாரதர் சொன்னார், “அதற்கு தினமும் எம்பெருமான் கதையைப் பாடுங்கள். கிருஷ்ணானுக்ரஹத்தால் எம்பெருமானின் மனம் கவரும் கதைகள் மக்களால் கேட்கப்படட்டும். அதை மிக பக்தியுடன் தினமும் கேட்பவர் மனங்கவரும் சுவையுடன் கூடிய பதங்களினால் பாடப்படும்”.

12. எப்பொழுதும் பகவானால் அளிக்கப்பட்ட அவரவர்கள் கர்மாக்களை செய்து கொண்டே ஸ்ரீமத்பாகவதம் கேட்பவர்கள் எம்பெருமானின் குணங்கள், பெயர்கள் இவைகளை நினைத்துக் கொண்டேயிருப்பார்கள் என்று சொன்ன நாரதர்.

13. இவைகளோடு வ்யாஸருக்கு மந்த்ரோபதேசமும் செய்தார். ‘பரம்பொருளாகிய பகவான் வாஸுதேவனுக்கு நமஸ்காரம் ப்ரத்யும்னன் அனிருத்தன், ஸங்கர்ஷணன் ஆகிய வ்யூஹ நிலையினருக்கும் நமஸ்காரம்.’ அடியேனுக்கு உயர் அறிவு தரப்பிரார்த்திக்கிறேன்.

14. ‘வ்யாஸ பகவானே! தேவர்களால் அளிக்கப்பட்ட இந்த மஹதி என்ற வீணையின் உயர்ந்த ஸ்வரங்களை மீட்டி நான் பகவானின் கதைகளைப் பாடிய வண்ணம் ஸஞ்சரிக்கிறேன்’ என்றார்.

15. வ்யாஸர் சொன்னார் ‘தேவரிஷி நாரதரே! அடியேன் தன்யனானேன் சார்ங்கம்’ எனும் வில்லேந்திய பகவானின் புகழைப்பாடி எனது துயரை போக்கி மகிழும்படி செய்தீர் என்று.

16. அடியேன் ஸ்ரீ ஹரியின் மங்களகரமான இந்தக் கதையை (ஸ்ரீமத் பாகவதத்தை) செய்கிறேன். உலகுயிர்களில் உறையும் அப்பரம்பொருளின் மங்களகரமான குணங்களாம் அம்ருதத்தையளிக்கிறனே.

## துருவ சரித்திரம்

1. ஸ்வயம்பு, மனுவின் மகன் உத்தானபாதன் என்னும் அரசன் இருந்தான். அவன் அறவோன்! ஸத்யந்தன், மஹாவீரன் சிறந்த அறிவாளனும் கூட.

2. அந்த அரசனுக்கு இரண்டு மனைவிகள். ஸுநீதி, ஸுருசி ஆகியவர்கள் அவர்களில் ஸுநீதி பெரியவள், நற்றவப்பெண் எல்லா உயர் குணங்களோடு கூடியவள்.

3. ஸுநீதி மகன் துருவன் என்ற ஐந்து வயது பாலகன். அவன் நல்லறிஞன். தெளிவான புத்தியுள்ளவன். தீரன் மானத்தில் பற்றுள்ளவன். தோஷங்களே இல்லாதவன்.

4. ஸுநிதி கணவனால் அலட்சியப்படுத்தப்பட்டாலும், கணவனை அநுஸரித்தே நடப்பவள். தன்னுடைய மகனின் முகத்தைப் பார்த்து அது ஒன்றிலேயே மனநிறைவும், இன்பமும் பெற்றவளாகவே இருந்தாள்.

5. ஒரு ஸமயம் ஸுருசியின் மகன் உத்தமன், தன் தந்தை உத்தானபாதன் மடியில் அமர்ந்திருப்பதைப் பார்த்துத் துருவன் தானும் தன் தகப்பனார் மடிமீது அமரச் சென்றான்.

6. பாசத்தோடு தகப்பனார் மடியில் ஏறவந்த அவனைப் பார்த்து, ஸுருசி கோபங் கொண்டவளாய் சில வார்த்தைகளைத் தெளிவாகச் சொன்னாள்.

7. "ஏய்" குறைந்த பாக்யம் உள்ளவனே! நில் உன் தகப்பனார் மடியில் ஏற ஏன் வருகிறாய். ஏய்! அறிவிலியே! உன் தகப்பனார் மடியில் ஏறி அமர ஒரு போதும் தகுதியுள்ளவன் அல்ல நீ.

8. "என்ன தைரியம்? என்னுடைய மாளிகையில் நுழைந்து வந்திருக்கிறாய். நீ என் மகன் அல்ல. போ உன்னுடைய தாயினிடத்துப் போ" என்றாள்.

9. துருவன் மனவருத்தத்துடனும், கோபத்துடனும் வருவதைப் பார்த்து தாய் "அப்பா குழந்தாய்! அவள் உனக்குத் தாய். அவள் மேல் கோபம் கொள்ளாதே. பொறுமையாய் இருந்தால் எல்லா செயல்களிலும் ஸித்தியை அடைவாய்" என்றாள்.

10. "குழந்தாய்!" இந்த அரசன் உனக்குத் தகப்பனாரோ, நான் உனக்குத் தாயாரோ அல்ல. ஸாக்ஷாத் நாராயணன் தான் உனக்குத் தந்தை. அதுபோல் மஹாலட்சுமி தான் உனக்குத் தாய்.

11. இந்த உலகில் மரணத்தை எல்லையாக உடைய எல்லா உறவுகளும் நிலையற்றவைகளே, ஆத்மாவிற்கு உற்ற உறவினன் கருணைக் கடலாகிய பகவான் ஒருவரே தவிர வேறு யாரும் இல்லை.

12. உலகின் தந்தையும், பெரியவனுமான பகவான் கோவிந்தனை நினை. அவன் ஒருவனே உன்னைப் போன்ற எளியவனுக்கு ரக்ஷகன். ஆம் தீனதயாளன்.

(தொடரும்)

# ஸ்ரீஸிந்து நதி மாஹாத்மியம்

- பி.ஆர்.கண்ணன், நவி மும்பை

## ரிக்வேதத்தில் ஸிந்து நதி

*ஸிந்து நதியின் பெருமை ரிக்வேதத்தில் பல மந்திரங்களில் வருகிறது. முக்கியமாக யாகங்களில் ஸிந்து நதியின் பங்கு போற்றப்படுகிறது.*

*'தீர்த்தங்களே, யஜமானனின் யாகசாலையிலிருந்து நாங்கள் தங்கள் பெருமையை வெகுவாகப் போற்றுகிறோம். நதிகள் ஏழு ரூபங்களாக, மூன்று லோகங்களிலும் (பூலோகம், அந்தரிக்ஷம், ஸ்வர்க்கலோகம்) ப்ரவகிக்கின்றன. அவற்றுள் ஸிந்து நதியானது தன் சக்தியினால் மற்ற எல்லா நதிகளையும் விட உயர்ந்து நிற்கிறது.' (8.3.6.10)*

*'ஸிந்து தேவியே, வருணன் தங்கள் பிரவாகத்திற்காக வழியை உண்டுபண்ணுகிறார். மற்ற எல்லா நதிகளையும் விட அதீத சக்தியுடன் தாங்கள் பிரவகித்து, உணவுப்பொருட்களை ஏராளமாக உற்பத்தி செய்கிறீர். மலைமுகட்டுகளில் உடைத்துக்கொண்டு பெருகி, பூமியில் ஸகல ஜீவராசிகளுக்கும் பொருட்செல்வத்தை வாரி வழங்குகிறீர்.' (8.3.6.10)*

*'ஸிந்து நதியின் ரதம் வெகு நேர்த்தி; குதிரைகள் மனோகரமானவை. அவள் அழகிய தங்க ஆபரணங்களைப் பூண்டு, பரிசுத்தமாகக் காட்சியளிக்கிறாள். எப்போதும் இளமையுடன் (நீர் நிறைந்து) உள்ளாள். ஏராளமான உணவுகள், கம்பளிகள் முதலானவற்றை வழங்குகிறாள். ஸில்னா முதலிய மருந்துசத்துகள் அவளுடைய நீரில் உள்ளன. தேன் தரும் நிர்குண்டி முதலான மூலிகைகளை (கரைகளில்) வழங்குகிறாள்.' (8.3.7.10)*

*'பால் நிறைய வழங்கும் பசுக்கள், யக்ஞவேதியில் அக்கினிஹோத்ரம் முதலான யாகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அக்கினியை எதிர்பார்க்கிறார்கள். அதேபோல், ஸிந்து போன்ற நதிகளும் மலைப்பிரதேசங்களிலிருந்து பூமியின் சமதரைகளுக்கு பெருகி, அக்கினியின் நல்லெண்ணத்தை எதிர்பார்க்கிறார்கள்; ஸமித் முதலான யாகப்பொருட்களை அக்கினிக்காகவே வளர்க்கிறார்கள்.' (1.5.20.1)*

'வயதுமுதிர்ச்சியே தாக்காத அஸ்வினிகுமாரர்களே, தாங்கள் ஸிந்து நதி, தேன் போன்ற இனிய நீருடன் பெருகவும், ஒருக்காலும் வற்றாமலிருக்கவும் காப்பாற்றுகிறீர்.' *(1.7.34.1)*

'ஏழு ரித்விக்குகள் யக்ஞத்தை முறைப்படி இயற்றி, தர்மத்தைக் கறக்கிறார்கள். ரிஷிகள் வசிக்கும் பிரசித்தமான ஸிந்து நதி தீரத்தை யாகம் செய்ய தகுந்த தீர்த்தமாக தேர்ந்தெடுத்தார்கள்.' *(6.5.15.8)*

'ஸிந்து மற்றும் பிற நதிகளே, தங்கள் ஸாரமே எங்கள் கர்மாக்களில் பங்குகொண்டு, காண்பதும், காணாததுமான இருவகைப் பலன்களையும் வழங்குகிறது. இந்திராதி தேவர்கள் பருகி திருப்தியடையும் நீரைப் பெருக்குங்கள். ஸோமலதையின் ஸாரத்துடன் சேரத் தயாராக உள்ளன இந்த நீர்கள். அந்தரிக்ஷத்திலிருந்து மழையாகப் பொழிந்து, இந்நீர்கள் மூவுலகங்களிலும் பரவுகின்றன. யாகப் பாண்டங்களில் நிரம்பி, அவை தேவர்களை அடைகின்றன (ஆஹுதிகள் மூலமாக).' (7.7.25.10)

இதுபோன்ற விசேஷ குறிப்புகள் - தானிய வளம், யாகங்கள், தேவர்களுக்கு ஆஹுதி முதலானவை - யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் ஆகியவற்றிலும் வெகுவாக அமைந்திருக்கின்றன.

### புராணங்களில் ஸிந்து நதி

பிரம்மவைவர்த்தபுராணத்தில், நாம் அன்றாடம் சொல்லும் பிரசித்தமான ஸ்லோகம் வருகிறது.

கங்கே ச யமுநே சைவ கோதாவரி ஸரஸ்வதி ।
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மிந் ஸந்நிதிம் குரு ॥
ஏழு பிரதான நதிகளில் ஸிந்துவைச் சேர்த்திருக்கிறார்கள்.

நாராயண ஸரோவர மாஹாத்மியம் கூறும்:

'ஸிந்து நதி ஸமுத்திரத்தில் ஸங்கமிக்கும் ஸ்தானத்தைப்போன்ற தீர்த்தம் -இதைத்தான் நாராயண ஸரோவர் என்கிறார்கள்- (இவ்விடம் தற்போது பாகிஸ்தானில் உள்ளது) உலகில் இருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. தேவர்களே அங்கு சரீரத்தைவிட விரும்புகிறார்கள்; பிறரைப்பற்றி என்ன சொல்வது?

ஸிந்தூததிஸமம் தீர்த்தம் ந பூதம் ந பவிஷ்யதி ।

அமரா ம்ருத்யுமிச்சந்தி ஹ்யந்யேஷாம் தத்ர கா கதா ॥

கயா, குருக்ஷேத்ராதி க்ஷேத்ரங்கள் சென்று, அதுவும் சூரிய க்ரகணம் போன்ற புண்ணிய காலங்களில் பலவித தானங்களை - பூமி, யானை, குதிரை, பொன் போன்றவை - நான்கு வேதங்களையும் கற்றறிந்த பிராம்மணனுக்கு அளித்தால் கிடைக்கும் புண்ணியத்தைவிட அதிக புண்ணியம் ஸிந்து ஜலத்தில் ஸ்னானம் செய்வதால் கிடைக்கிறது. தேவன், அசுரன், மனிதன், நாகன் யாருமே ஸிந்துவின் பெருமையைக்கூற சக்தியற்றவரே.'

'ஸிந்துவில் சென்று பித்ருகாரியங்களைச் செய்யவேண்டுமென்று பித்ருக்கள் ஆசைப்படுகிறார்கள். அவ்வாறு செய்பவன் வாழ்க்கை ஸார்த்தகமாக ஆகும்.'

கிருஷ்ண பகவான் யுதிஷ்டிரரிடம் ஸிந்துவின் பெருமையைப்பற்றிக் கூறுகிறார்:

த்ருஷ்ட்வா ஜந்ம தம் பாபம் ஸ்ப்ருஷ்ட்வா ஜந்ம தத்ரயம் ।
ஸ்நாத்வா ஜந்மஸஹஸ்ராணாம் ஹந்தி ஸிந்தோர்மஹஜ்ஜலம் ॥

'ஸிந்து நதி தரிசனமே நூறு ஜன்மங்களின் பாபங்களைப்போக்கும். ஸ்பரிசம் முந்நூறு ஜன்ம பாபங்களை அழிக்கும். ஸ்னானத்தினால் ஆயிரம் ஜன்ம பாபங்கள் தொலையும்.'

இதனை விளக்க ஒரு கதை சொல்கிறார் பகவான். கான்யகுப்ஜ அரசன் ஒரு சமயம் வேட்டையாட காட்டிற்குச் சென்று ஒரு பன்றியைத்துரத்தி அம்பெய்ய, நாராயண ஸரோவர் க்ஷேத்திரத்தில் அப்பன்றி விழுந்து பிராணனை விட்டது. வாழ்க்கையின் கடைசி நொடியினில் ராஜாவை நினைத்து உயிரை விட்ட பன்றி, ராஜாவின் பெண்ணாகப் பிறந்தது. ஆனால் முகம் பன்றியாகவும், கழுத்திற்குக்கீழ் மானிடப்பெண்ணாகவும் இருந்த அப்பெண்ணைக்கண்டு, பெண் ஸத்குணங்கள் பெற்றிருந்தாலும், பெருந்துயரத்தில் ஆழ்ந்தார் ராஜா. ஒரு நாள் ராஜஸபைக்கு விஜயம் செய்த கபில வாஸுதேவ மாமுனிவரிடம் ராஜா தன் துயரத்தைத் தெரிவித்தார். முனிவர் தியானம் செய்து ராஜாவிடம் சொன்னது பேராச்சரியமாக இருந்தது. 'பன்றி பிராணனை விட்டபோது உன்னை தியானித்ததால் உன் பெண்ணாகப் பிறந்தது. பன்றியின் சரீரத்தின் கீழ்ப்பாகம் அம்பின் வேகத்தினால் ஸிந்து நதியில் வீசப்பட்டதால், ஸிந்து நதியின் மஹிமையினால், மானிட சரீரமாக அப்பகுதி பிறந்துள்ளது. ஆனால்

முகபாகம் வள்ளிக்கொடிகளில் சிக்கிக்கொண்டு அங்கேயே இருந்துவிட்டபடியால், பெண்ணின் முகம் பன்றிரூபமாக உள்ளது. நீ இப்போது அந்த இறந்த பன்றியின் முகத்தைத் தேடி எடுத்து, ஸிந்து நதியில் சேர்த்துவிட்டால், இப்பெண்ணின் முகம் மானிடமுகமாக மாறிவிடும்' என்றார். ராஜாவும் அவ்வாறே செய்ய, பன்றியின் முகத்தை ஸிந்துவில் சேர்த்துவிட்ட உடனேயே, பெண்ணின் முகம் பேராச்சரியமாக சந்திரபிம்பம் போன்ற அழகிய பெண் உருவமாக மாறிற்று. அதீத ஆனந்தமடைந்த ராஜா பெரிய யாகம் செய்து, ஏராளமான தானங்களை அளித்தார். இக்கதையை சிரவணம் செய்வதே ஆயிரம் கோதானபலனைக் கொடுக்கும்.

(தொடரும்)

## வாழ்விக்க வந்த புராண வசனங்கள் 2

21 தன் புலந்களைக் கட்டுப்படுத்தி வைப்பவருக்கு சலனமற்ற மனமிருக்கும்.

**கீதை 2. 1**

இறை அருளால் அமுதம் விஷமாகும் விஷம் அமுதாகும். **காளிதாசர்**

இயற்கையிலே சிறந்த மனிதர்கள் அடுத்தவர் துயர் கண்டு சகிக்க மாட்டார்கள்.

**ஸ்காந்தம்**

சிறந்த மனிதர்கள் தம் செல்வத்தை அடுத்தவர் துயர் தீர்க்க பயன்படுத்துவர்.

**காளி தாசர்**

ஆர்வமுள்ளவனுக்கு எதுவும் முடியாதது அல்ல. **வா ராமாயணம்**

உத்சாகம் உள்ளவர்கள் எதிரிகளையும் தன் பக்கம் ஈர்க்கும் திறன் கொண்டவர்கள்.

**சாணக்யர்**

துணிச்சலும் கடும் உழைப்பும் உள்ளவரைத் தான் லக்ஷ்மீ விரும்புகிறாள்.

**பஞ்சதந்த்ரம்**

# குரு என்பவர் யார்?

- மஹா பெரியவாளின் அற்புதமான விளக்கம்:-

சாந்தோக்ய உபநிஷத்தில் தான் ''தத்வமஸி'' என்ற மஹாவாக்கியம் வருகிறது.



'' நீயேதானப்பா அந்த பிரம்மமாயிக்கிறாய் என்று ச்வேதகேதுவுக்கு அவனுடைய பிதா உத்தாலக ஆருணி திரும்ப திரும்ப ஒன்பது தடவை செய்த உபதேசம் அது.

தத்-த்வம்-அஸி = ''தத்'' என்பது பரமாத்மாவான பிரம்மம்; ''த்வம்'' என்பது ஜீவாத்மா; ''அஸி'' என்றால் இருக்கிறாய். பரப்பிரம்மமாக இருக்கிறாய் - என்றைக்கோ ஒருநாள் அல்ல! எதிர்காலத்தில் இல்லை; இப்போதும் எப்போதும் எல்லோரும் எல்லாமும் பிரம்மம்தான். இனிமேலே தான் பிரம்மமாக வேண்டும் என்பதில்லை.

அப்படியானால் ஸாதனை எதற்கு? பிரம்மமாக இருந்தாலும் அதை நாம் தெரிந்து கொள்ளவில்லையே! தெரிந்தால் இத்தனை அழுகை, இத்தனை காமம், கோபம், இத்தனை பயம் நமக்கு இருக்கவே இருக்காதே! அலையே எழும்ப முடியாமல் ஆகாசம் வரை முட்டிக் கொண்டு நிற்கிற ஆனந்த சமுத்திரமாக அல்லவா இருப்போம்?

எனவே ''நீ எப்போதும் பிரம்மம் தானப்பா'' என்றால் எப்படி? அதைப் புரிய வைக்க ஒரு கதை: நமது வாழ்க்கையே எதாவது ஒரு கதையை நம்பி தானே நடக்கிறது. ப்ருஹதாரண்யக உபநிஷத் பாஷ்யத்தின் நடுவிலே (II-1-20) சங்கர பகவத் பாதாள், சிலந்தி தன்னிலிருந்தே நூலை இழுத்து வலை பின்னுகிற மாதிரியும், அக்னி தன்னிலிருந்தே பொறிகளை உதிர்க்கிற மாதிரியும் , ஆத்மாவிலிருந்தே அத்தனை பிரபஞ்சமும் தோன்றியிருக்கிறது எனகிற மந்திரத்துக்கு ரொம்ப விஸ்தாரமாக அர்த்தம் பண்ணிக்கொண்டு போகிறபோது, இந்தக் கதை வருகிறது.

ஒரு ராஜகுமாரன் அவனது அப்பா அம்மா எதிரி ராஜாவின் படையெடுப்பில் கொல்லப்பட்டதால், உயிர் தப்பி மந்திரியால் காட்டில் வேடர்கள் பகுதியில் குழந்தையாக விடப்பட்டு இளம் வயதில் வேடர்களோடு வளர்கிறான். பெரியவனாகி, பின்னால் அவன், தான் ஒரு ராஜகுமாரன் என்று அவனை தப்பிக்க விட்ட மந்திரி மூலமே உணர்கிறான். இத்தனை காலமும் வேடப் பையனாகவே தன்னை நினைத்துக் கொண்டிருந்த காலத்திலும் அவன் ராஜா பிள்ளைதானே? இது முதலில் தெரியாததால் வேடன் மாதிரி வாழ்க்கை நடத்தினான். உண்மை புரிந்தவுடன் ,ராஜ குமாரனாகவே எப்போதும் இருந்தவன் ராஜகுமாரனாகவே அநுபவத்தில் வாழ்ந்து காட்டினான். வேடப்பையனும் ராஜகுமாரனும் இரண்டுபேர் இல்லை. ஒருத்தன் இன்னொருத்தனாக மாறவில்லை. ஒரே பேர்வழிதான். முதலில் தன்னை தெரிந்து கொள்ளவில்லை. புரியவில்லை. அப்புறம் புரிந்துகொண்டு விட்டான். புரியாத நிலையில் வேடனாக எங்கேயோ கீழ்நிலையில் வேடப்பையனாகி கிடந்தவன் புரிந்து கொண்டவுடன் ராஜகுமாரனாகினான். அப்புறம் எதிரி ராஜாவோடு சண்டை போட்டு ஜெயித்து ஸாம்ராஜ்யாதிபதி யாகவே ஆகிவிட்டான்.

நாமெல்லாருமே இந்த மாதிரி ''வேட'' வேஷத்தில் தான் உள்ளோம். ஜீவாத்மா என்ற வேஷத்தில் ஸம்ஸாரிகளாகவே நம்மை நினைத்துக் கொண்டிருந்தாலும் வாஸ்தவத்தில் நாமும் பரமாத்மாவேதான். வேஷம் எப்படியிருந்தாலும் உள்ளே இருக்கிற வஸ்து எப்போதும் பரமாத்மாதான். ஐம்புலன்களின் வசியத்தில் இழுக்கிற வழியில் ஒடி வேட்டையாடிக் கொண்டிருக் கிறோம். நாம் உண்மையில் பிரம்மம்என்று தெரிந்து கொள்ளலாமா? தெரிந்தால் மட்டும் என்ன? அநுபவத்தில் கொண்டுவர முடியாதபடி இந்திரியங்கள் (ஐம்புலன்கள்) இழுத்துக்கொண்டே இருக்கும். ராஜகுமாரனாகவே இருந்தாலும் வாஸ்தவத்தில் அரசத்தன்மையை அடைவதற்காக அவன் அஸ்திர சஸ்திர அப்பியாஸம் பண்ணி எதிரிகளை ஜயித்து ஸாம்ராஜ்யாதிபதியான மாதிரி, நாமும் பிரம்மமாகவே எப்போதும் இருந்தாலும் அதை உணராமலிருப்பதால் கர்மத்தில் ஆரம்பித்து பக்தி வழியாக, ஞான சாதனைகளைச் செய்து, உட்பகைகளை யெல்லாம் ஜயித்து, ஆத்ம ஸாம்ராஜ்யத்தில் ராஜாவாகஆகவேண்டும். 'ஸாம்ராட்'- அதாவது ராஜா - என்றே உபநிஷத்தில் ஆத்ம ஞானியைச் சொல்லியிருக்கிறது.

ஐஸும் ஸ்படிகமும் ஒரே மாதிரித்தான் வெளிப்பார்வைக்கு இருக்கின்றன. ஆனால் ஐஸ்தான் உருகி ஜலமாகுமே தவிர, ஸ்படிகம் ஜலமாகாது. ஏனென்றால் எது ஜலமாகவே இருந்து அப்புறம் உறைந்து வேறே வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறதோ அதுதான்

உருகி மறுபடியும் தன்ஸ்வயமான பூர்வ ரூபத்தை அடைய முடியும். பிரம்மமே ஜீவனாக உறைந்து போயிருப்பதால்தான், இந்த ஜீவாத்மாவும் உருகிப் போனால்மறுபடியும் பிரம்மமாகவே அநுபவத்தில் ஆக முடிகிறது. ஐஸ் தானாக கரைகிறது. நாம் கரைய மாட்டோம் என்கிறோம். அது தான் வித்தியாசம்.

''கல்லேனும், ஐயா, ஒரு காலத்தில் உருகும் என் கல்நெஞ்சம் உருகவில்லையே! -- தாயுமான ஸ்வாமிகள் நமக்காகத்தான் பாடியிருக்கிறார். நம்மை உருக வைக்க ஒன்று தேவைப்படுகிறது. கதையில் ராஜகுமாரனை Practical- ஆக ராஜகுமாரனாக்குவதற்காக ஒரு மந்திரி வந்த மாதிரி, நம்மை உருக்கி நிஜ நாமாகப் பண்ண ஒருத்தர் வேண்டும். அவன் வரமாட்டேன் என்று முரண்டு செய்தாலும் வலிய இழுத்த மந்திரி மாதிரி,பாரமார்த்திகத்தின் பக்கமே போகமாட்டேன் என்ற அடம்பிடிக்கிற நம்மைக் கட்டி இழுக்க ஒருத்தர் வேண்டும். அப்படி ஒருத்தர் இருக்கிறாரா? நம்மை நம்முடைய நிஜ ''நாமா'' க ஆக்கக்கூடிய ஒருத்தர் இருக்கிறாரா?

இருக்கத்தான் செய்கிறார். வேடப் பையனுக்கு நீதானப்பா ராஜகுமாரன் என்று சொல்லிப் புரியவைத்து, அவனுக்கு அஸ்திரப் பயிற்சி கொடுத்து, அவனை ராஜாவாக்குவதற்காகஅவனை விட ஜாஸ்தி உழைத்த மந்திரி இந்த ஒருத்தருக்குத்தான் ரூபகம். (உருவகம்) . நமக்கு நம் '' பரமாத்ம'' த்வத்தை எடுத்துச் சொல்லி, அதை நாம் அநுபவமாக்கி கொள்வதற்கான ஸாதனைகளைச் செய்ய வைத்து, நம் கர்மா பாக்கி தீருவதற்காக தாமே தபஸைச் செலவு செய்து உபகாரம் பண்ணும் அந்த ஒருத்தர் தான் குரு என்பவர்.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 15

முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்



அம்பாள் தான் கீதோபதேசம் செய்தாள் இந்த விஷயத்தை ஸ்ரீபெரியவா பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு குரு ஆராதனையின் போது கூறினார்கள். அன்று என்னிடம் பேப்பர் பேனா எடுத்து வரச் சொல்லி தேனம்பாக்கம் குளக்கரையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு வார்த்தையாகக் கூறினார்கள். ஐந்து ஸ்லோகங்கள் உத்பத்தியாயின. இவை காமாக்ஷி கோயிலில் நுழைந்ததும் இடப்புறம் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன.

''காமாக்ஷி பஞ்சரத்னம்'' என்று இதற்குப் பெயர். ''தே த்யான யோகானுகதா அபஸ்யன்' என்று இப்பஞ்சரத்னம் துவங்குகிறது.

ஒவ்வொரு ஸ்லோகத்தின் கடைசியிலும் ''த்வம் பாஹி விஸ்வேஸ்வரீ மோக்ஷதாத்ரீ'' என்று முடியும். இதில் கீதோபதேசம் செய்தவளே ''உபதிஷ்டகீதா'' என்று வரும். கீதையை அம்பாள் உபதேசித்தாளா என்று யோசிக்கிறாயா என்று கேட்டு விட்டு இதற்கு

கீதையிலேயே குறிப்புள்ளதாகவும் சாங்கரபாஷ்யத்திலும் உள்ளதாகவும் கூறி ப்ரம்மஸ்ரீ ராமக்ருஷ்ணரை வரவழைத்தார்கள்.

இதைப்பற்றி அவரிடமும் வினவினார்கள். பிறகு தானாகவே கீதாபாஷ்யத்தைப் புரட்டி ஓரிடத்தில் நிறுத்தி என்னிடம் கொடுத்தார்கள். அதில் 14ஆம் அத்யாயம் கடைசி ஸ்லோகம்.

**''ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம் அம்ருத்ஸ்ய அவ்யயஸ்ய**
**சாஸ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்ய ஏகாந்திகஸ்ய''**

என்று இருந்தது. அதில் பாஷ்யத்தில் விளக்கம் வரும்போது சக்தியும் சக்தியை உடையவருமான தானும் ஒன்று தான்''என்று பாஷ்யத்தில் இருப்பதை உரக்கப் படிக்கச் சொன்னார்கள். பிறகு சக்தி எனும் ஸ்ரீஅம்பாளும் ஸ்ரீக்ருஷ்ணராகிய தானும் ஒன்றுதான் என்று க்ருஷ்ணர் கூறியதாக ஸ்ரீசங்கரர் விளக்கியதால் கீதோபதேசம் செய்தவள் அம்பாள்தான் என்று விளக்கினார்கள். பெரிவரின் மேதா விலாஸம். சர்வஞ்யத்வம் எத்தனை பெரியது? எத்தனை அரியது?

# புராணக் கதை

## காஞ்சி வாதூலன்

ஒரு வனாந்தரம். அதில் ஒரு வேட்டைக்காரன் இருந்தான். பார்க்கவே கொடூரமாக இருப்பவன். நெடிய தேகம், திரண்ட புஜங்கள், செக்கச்சிவந்த விழிகள், முகத்தில் வெறுப்புக் கொப்பளிக்கும். அவனுக்கு உறவினர் யாரும் இல்லாததால் தனியே தனிச்சைப்ப்டி வனத்தில் திரிந்து பார்க்கும் ஜந்துக்களையெல்லாம் அடித்து வீழ்த்துவது வழக்கம். காருண்யமே இல்லாத அவனை மற்றவர்கள் ஒதுக்கி வைத்தனர். பறவைகளைப் பிடித்து வலையில் வைத்து அவைகளின் மாம்சத்தை விற்பது அவன் தொழில்.

இப்படி ஒரு நாள் அந்த வனத்தில் அவன் போய்க்கொண்டிருந்த போது பேய்க் காற்றுடன் மாமழை பொழிய ஆரம்பித்தது அவனே குளிரில் நடுங்க ஆரம்பித்தான். பல ஜந்துக்கள் அச்சத்தில் ஒட ஆரம்பித்தன. அவனும் மழைக்கு ஒதுங்க இடம் தேடினான். ஓரிடம் கூட இல்லை. எல்லாம் வெள்ளப் ப்ரவாகத்தில் இருந்தன. நடுங்கிக் கொண்டிருந்த அவன் அருகில் ஒரு பெண்புறா குளிரில் நடுங்கி கொண்டிருந்ததைப் பார்த்தான். வழக்கம் போல் அதை எடுத்து தன் கூட்டினுள் வைத்துக்கொண்டான். தான் தங்க இருப்பிடம் தேடினான். இறுதியில் ஒரு பெரிய ஆலமரத்தைக் கண்டான்.

யார் வரினும் வாருங்கள், இளைப்பாருங்கள் என்று கூறுவதுபோல் அது நின்று கொண்டிருந்தது. மழை ஓய்ந்தபின் வானம் வெளுத்தது. இரவு கவிய ஆரம்பித்தது. அவனும் அந்த இரவை அந்த மரத்தினடியில் கழிக்க நினத்து அங்கேயே படுத்தான். இதன் நடுவில் தன் துணை வரவில்லை, எங்கு போய் மாட்டிக் கொண்டாளோ என்ற ஏக்கத்தில் புலம்ப ஆரம்பித்தது.

எத்தனை துணையிருந்தாலும் வீட்டிற்கு அழகு மனைவிதானே. தர்மார்தத, காம மோக்ஷத்திற்கு அவள்தானே காரணம். மனைவி இல்லாத வீடு சூன்யமல்லவா. மனைவி வரவில்ல என்று இப்படி புலம்பிக்கொண்டிருந்த அதன் குரலைக்கேட்ட கூட்டில் இருந்த பெண்புறா மகிழ்ச்சியடைந்தது. எப்பேர்பட்ட கணவன் எனக்கு. என்னைப் புகழ்ந்து பேசுகிறார். நான் பாக்யசாலி என்று உவகைக் கொண்டது. தன் பால் பரிவு கொண்ட கணவனை நோக்கி பேசலுற்றது. '' நான் சொல்வதைக் கேளுங்கள். இங்கே மரத்தடியில்

ஒரு மனிதர் குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறார். நமது வீட்டிற்கு வந்த விருந்தாளி அவர். அவருக்கு அதிதி ஸத்காரம் செய்வது நம் கடமை அல்லவா. அவருக்கு ஏதெனும் உதவுங்கள்'' என்றது

தன் பேடின் குரல் கேட்டு மகிழ்ந்த ஆண் புறா அது சொன்ன தர்மத்தை ஏற்றுக்கொண்டது. எதிரியாயினும் அதிதி கொண்டாடப்பட வேண்டும். எனவே உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள் என்றது. வேட்டைக்காரனும் ரொம்ப குளிராக உள்ளது, அதைப் போக்கவும் என்று கூற ஆண் புறா ஓடிச் சென்று எரிந்து கொண்டிருந்த சருகுகளைக் கொண்டு போட்டுத் தீயை அதிகரிக்கச் செய்தது. இன்னும் என்ன வேண்டும் என்று கேட்க அவன் பசி அதிகமாயுள்ளது என்றான். ஐயகோ நாங்கள் உண்பதோ குருணிகள். எப்படி உமது பசியைப் போக்குவேன் என்று விசனப்பட்டது. சரி கவலை வேண்டாம். அதிதியை மகிழ்விக்க வேண்டும் என்று தபோதனர்கள் கூறியுள்ளார்கள்.

அதனால் என் மாம்ஸத்தை நீர் புசியும் என்று கூறி தீயை மூன்று முறை வலம் வந்து வீழ்ந்தது. இதை சற்றும் எதிர்பார்க்காத வேட்டைக்கரன் மனம் ஆடிப்போயிற்று. விதிர் விதிர்த்துப் போன அவன் சீ என்ன வாழ்க்கை இதுவரை வாழ்ந்தேன். இப்பறவை பெரிய பாடத்தை எனக்குச் சொல்லிவிட்டது. இனி நான் இவ்வாழ்க்கையை வாழ மாட்டேன். அற வழிதான் என்வழி, பசி தாகம் தாங்கி வாழ்வேன், அறமே என் மூச்சு என்று கூறி கூட்டிலிருந்த பறவையை வெளியில் விட்டான். தன்னிடமிருந்த பொருள்களையும் வீசி எறிந்தான். அங்கிருந்து கிளம்பி நடக்க ஆரம்பித்தான்.

கூட்டிலிருந்து வந்த பெண் புறா தன் கணவன் தீயில் வீழ்ந்ததைப் பார்த்து'' எத்தனைக் காலம் நாம் ஒன்றாய் பாடி திரிந்தோம், ஓடித் திரிந்தோம், ஒரு நாள் கூட நாம் பிரிந்தது இல்லையே, மற்றவர்கள் தரும் அன்பைக் காட்டிலும் கணவன் தருவதல்லவா சிறந்தது. என்று புலம்பிக்கொண்டே தானும் எரிதழலில் வீழ்ந்தது.

இதையெல்லாம் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வேடுவனின் மனம் கரைந்தது. நானும் இதுபோல் இருப்பேன் என்று சங்கல்பம் எடுத்துக்கொண்டு எதைப்பற்றியும் கவலை இல்லாமல் போனான். உலகபந்தங்களை அறுத்தான். பசி தாகம் வந்த போதும் அடக்கி கொண்டான். கால்களை முட்கள் குத்தின. உடலை செடிகள் கீறின. கவலையுறவில்லை அவன். நடந்தான் நடந்தான். ஒரு பெரும் காட்டித்தீயைக் கண்டான். தான் செய்த கொடுமைகளை நினைத்தான், தீயில் புகுந்தான். சாம்பலானான்.

(பாரதம் சாந்திபர்வம்)

# வேதாந்த ஸாரம்

## ஸாதானந்த யோகி

வேங்கடகணபதி சர்மா

## துரீயத்தின் ஸ்வரூபம்

**வனவ்ருக்ஷதவிச்சின்ன ஆகசயோர்ஜலாசயஜல தத்கத ப்ரதிபிம்ப ஆகசயோ: ஆதாரபூத அனுபஹித ஆக்கசவதானயோ:அஞ்யான தனுபஹித சைதன்யயோராதாரபூதம் யதனுபஹிதம் சைதன்யம் தத்துரீயமித்யுச்யதேந''ஸாந்தம்சிவம் அத்வைதம் சதுர்தம் மன்யதே நிஸ ஆத்மா விஞ்யேய:) இத்யாதி ஸ்ருதே: 49**

தனிமரத்திற்கு இடம் எதுவோ வனத்திற்கு இடம் எதுவோ, நீர் எடுத்துக்கொள்ளும் இடம் எதுவோ நீர் நிலை எடுத்துக்கொள்ளும் இடமெதுவோ அப்படியே அகண்டமான ப்ரஞ்யை தனிமனித, ஈஸ்வர ப்ரஞ்யைக்கு ஆதார பூதமாக உள்ளது. இதுவே துரீயம் எனப்படும். சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்தம் மன்யதே'' என்று ஸ்ருதி இருப்பதால்.

**இதமேவ துரீயம் சுத்த சைதன்யம் அஞ்யானாதிததுபஹித சைதன்யாப்யாம் தப்த அய:பிண்டவத் அவிவிக்தம் ஸன் மஹா வாக்யஸ்ய வாச்யம் விவிக்தம் ஸல்லலக்ஷ்யமிதி சோச்யதே ।। 50**

எப்படி நெருப்பில் போட்ட இரும்பு குண்டை அறியாமையால் நெருப்பு என்றும் அறிவுடன் இரும்பு குண்டு என்று கூறுகிறோமோ அப்படியே துரீய சைதன்யம் அறியாமையால் வாச்யமாகவும், அறிந்தவுடன் லக்ஷ்யமாகவும் கூறப்படும்.

# ஆடி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 23-08-2019 | வெள்ளி | கோகுலாஷ்டமி |
| 26-08-2019 | திங்கள் | ஏகாதசி |
| 27-08-2019 | செவ்வாய் | துவாதசி |
| 28-08-2019 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 02-09-2019 | திங்கள் | விநாயக சதுர்த்தி |
| 05-09-2019 | வியாழன் | அனுஷம் தேர் |
| 05-09-2019 | வியாழன் | அனுஷம் பாராயணம் |
| 07-09-2019 | சனி | மூலம் தேர் |
| 07-09-2019 | சனி | ஆவணி மூலம் |
| 09-09-2019 | திங்கள் | உத்ராடம் தேர் |
| 09-09-2019 | திங்கள் | ஏகாதசி |
| 10-09-2019 | செவ்வாய் | துவாதசி |
| 10-09-2019 | செவ்வாய் | உத்ராடம் பாராயணம் |
| 11-09-2019 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 11-09-2019 | புதன் | அவிட்டம் தேர் |
| 12-09-2019 | வியாழன் | அவிட்டம் பாராயணம் |
| 13-09-2019 | வெள்ளி | பௌர்ணமி பூஜை |
| 14-09-2019 | சனி | சாதூர்மாஸ்ய பூர்த்தி, விஸ்வரூப யாத்திரை |
| 14-09-2019 | சனி | மஹாளயம் ஆரம்பம் |
| 23/08/19, 30/08/19, 06/09/19 - 13/09/19 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ருத்ர கீதை

*சின்னவன்*

**பதா சரத்பத்மபலாச ரோஷிஷா நகத்யுபிர்னோந்தரகம் வித்யுன்வதா**
**ப்ரதர்சய ஸ்வீயமபாஸ்தஸாத்வஸம் பதம் குரோ மரககுருஸ்தமோ**
**ஜுஷாம் 19**

*சரத்காலததைப் போன்று காந்தியுடையதும் நகங்களின் காந்தியால் உள்ளே இருக்கும் அழுக்கை போக்குவதுமாகிய திருவடியுடன் கூடிய உமது ரூபத்தை காண்பியுங்கள். ஓ குருவே ஒருவித பயமுமற்ற தங்கள் பதவியைக் காண்பியுங்கள். ஏனெனில் அஞானிகளான ஜீவர்களுக்கு நல் மார்க்கத்தை உபதேசிக்கும் ஞான குரு அல்லவா உமது திருவடி.*

**ஏதத்ரூபம் அனுத்யேயமாத்மசுத்திமீப்ஸிதாம்**
**யத்பக்தியோகோஅபயத: ஸ்வதர்மமனுஷ்டிதாம் ॥ 20**

*ஸித்தசுத்தியை விரும்புவர்களும் தம் கடமையை செய்பவர்களால் இப்பேர்பட்ட ஸ்வரூபம் த்யானம் செய்யத்தக்கது. ஏனெனில் பகவானிடம் பக்தி செலுத்துதல் என்பது மோக்ஷம் வரை பலனை அளிக்கவல்லது.*

**பவான் பக்திமதா லப்யோ துர்லப: ஸர்வதேஹினாம்**
**ஸ்வராஜ்யஸ்யாபி அபிமத ஏகாந்தேனாத்மவித்கதி: ॥ 21**

*எல்லா ஜீவர்களாலும் அடைய முடியாத தாங்கள் பக்தனால் அடையத்தக்கவர். மோக்ஷமடைந்தவர்களாலும் விரும்பத்தக்கவர். உறுதியாக ஆத்மஞானிகளுக்கும் அடைக்கலமளிப்பவர்.*

**தம் துராராத்யமராத்ய ஸதாமபி துராபயா**
**ஏகாந்தபக்த்யா கோ வான்சேத் பாதமூலம் வினா பஹி: ॥ 22**

*ஸாதுக்களாலும்கூட எளிதில் அடைய்முடியாத சிறந்த பக்தியினால் த்ருப்தி செய்யமுடியாத அவரை பூஜித்து அவரது திருவடி ஸேவையைத் தவிர வேறு எந்தபொருளை எவன் விரும்புவான்?*

**யத்ர நிர்விஷ்ட சரணம் க்ருதாந்தோ நாபிமன்யந்தே**
**விஸ்வம் வித்வம்ஸயன் வீர்யசௌர்யவிஸ்பூர்ஜிதப்ருவா ॥ 23**

எந்த பகவானுடைய திருவடியில் அடைக்கலம் புகுந்தவனை வீர்யம் மனோபலம் இவற்றின் பெருமையினால் உலகத்தை அழிக்கும் எமன் அணுகமாட்டனோ அப்பேர்பட்ட பாதம் த்யானிக்கத் தகுந்தது.

**க்ஷணார்தேனாபி துலயே ந ஸ்வர்கம் நாபுனர்பவம்**
**பகவத்ஸங்கிஸங்கஸ்ய மர்த்யானாம் கிமுதாசிஷ: ॥ 24**

மனிதர்களுக்காக பக்தர்களின் சேர்க்கை அரைக்கணம் ஏற்பட்டாலும்கூட ஸ்வர்கத்தையும் அதற்கு இணையாகக் கருத மாட்டேன், மோக்ஷத்தையும் கருதமாட்டேன் மற்றவைகளைப் பற்றிக் கேட்பானேன்?

**அதானகாங்க்ரேஸ்தவ கீர்திதீர்தயோரந்தார்பஹி:ஸ்னான விதூத பாப்மனாம்**
**பூதேஷ்வனுக்ரோச ஸுஸத்வசீலினாம் ஸ்யாத்ஸங்கமோ அனுக்ரஹ; ஏவ நஸ்தவ ॥ 25**

குற்றமற்ற திருவடிகளைக் கொண்ட உமது புகழ், பாத தீர்த்தம் இவைகளில் உள்ளும் புறமும் ஸ்னானம் செய்து பாவம் விலகியவர்களும் ப்ராணிகளிடம் கருணைகாட்டுதல் என்பதைக் கொண்டவர்களும் இந்த சாதுக்களின் சேர்க்கை உங்கள் அனுக்ரஹமேயன்றி வேறு அல்ல.

**ந தஸ்ய சித்தம் பஹிரர்தவிப்ரமம் தமோகுஹாயாம் ச விசுத்தமாவிசத்**
**யத்பக்தி யோகானுக்ரஹீதமஞ்சஸா முனிர்விசஷ்டே நனு தத்ர தே கதிம்॥ 26**

எப்பக்தியினால் அனுக்ரஹிக்கப்பட்ட எவனது புனித மனம் புறப்பொருள் ப்ராந்தியில் ஈடுபடவில்லையோ அஞ்ஞானம் எனும் குஹையில் நுழைவதில்லையோ அப்பேர்பட்ட நிலையில் முனி தங்கள் ஸ்தானத்தை நேரில் காண்கிறானல்லவா?

**யத்ரேதம் வ்யஜ்யதே விஸ்வம் விஸ்வஸ்மின்னவபாதி யத்**
**தத் த்வம் ப்ர்ஹ்ம பரம் ஜ்யோதிராகாசமிவ விஸ்த்ருதம் ॥ 27**

எந்த ஸ்வரூபத்தில் இவ்வுலகம் தோற்றமளிக்கிறதோ எந்த ஸ்வரூபம் உலகில் விளங்குகிறதோ அப்பேர்பட்ட ஆகாயம் போல் எங்கும் பரவியதும் பரமான ஜோதிஸ்வரூபம் தாங்களே.

(தொடரும்)



# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்

**ஹஸ்தாம்போஜப்ரோல்லஸத் சாமராப்யாம்**
**ஸ்ரீ வாணிப்யாம் பர்ஸ்வயோர் வீஜயமானாம்**
**ஸ்ரீ ஸம்ராஞ்கீ த்வாம் ஸதா லோகயேயம்**
**ஸதா ஸத்பி; ஸேவ்யமானாம் திகூடாம் ।। 91**

திரு நிறைந்தவளே கரத்தில் சாமரங்களை தரித்த லக்ஷ்மீ ஸரஸ்வதிகளால் இருபுறமும் வீசப்படுபவளும் சதா ஸாதுக்களால் ஸேவிக்கப் படுபவளும் மறைவாயுள்ளவளுமான உம்மை ஸதா தர்சிக்க வேண்டும்.

**இஷ்டா நிஷ்டப்ராப்திவிச்சின்னஹேது:**
**ஸ்தோதும் வாசாம் க்ல்ப்த்ரித்யேவ மன்யே**
**த்வத்ரூபம் ஹி ஸ்வானுபூத்யைகவேத்யம்**
**ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா ।। 92**

விருப்பு வெறுப்பு அகலக் காரணமான உன்னை துதிப்பதே வாக்கின் பயனான ஸாதனை என எண்ணுகிறேன். உன் ஸ்வரூபம் ஸ்வானுபவத்தால் மாத்ரம் அறியக்கூடியது. கண்ணால் காண முடியாது, வாக்கினாலும் கூறமுடியாது.

**ஹரஸ்வரைச்சதுர்வர்கபதம் மந்த்ரம் ஸபிந்துகம்**
**தேவ்யா ஜபத விப்ரேந்த்ரா அன்யா வாசோ விமுன்சத ।। 93**

ப்ராம்மண ஸ்ரேஷ்டர்களே ஹ்ர்ஸ்வரம் பிந்துவுடன் கூடிய தேவீ மந்த்ரத்தை ஜபியுங்கள். மற்ற வாக்கை விடுங்கள்.

**யஸ்தே ராகாசந்த்ரபிம்பாஸனஸ்தாம்**
**பியூஷாப்திம் கல்பந்தீம் மயூகை:**
**மூர்திம் பக்த்யா த்யாயதே ஹ்ருத்ஸரோஜே**
**ந தஸ்ய ரோகோ ந ஜரா ந ம்ருத்யு: ।। 94**

பூர்ணிமாசந்த்ரனில் இருப்பதும், கிரணங்களால் அமுதக்கடலை உண்டு பண்ணுவதுமான உன் மூர்த்தியை பக்தியுடன் யார் இதயக் கமலத்தில் த்யானம் செய்கிறானோ அவனுக்கு நோய், மூப்பு சாவு கிடையாது.

**துப்யம் மாதர்யோஞ்சலிம் மூர்த்னி தத்தே**
**மௌளிஸ்ரேண்யா பூபுஜஸ்தம் நமந்தி**
**ய: ஸ்தௌதி த்வாம் அம்ப சித்வல்லிவாசா**
**தம் தீராஸ: கவய உன்னயந்தி ।। 95**

*தாயே உன்னை தலைமேல் அஞ்சலி செய்பவனை அரசர்கள் வணங்குகிறார்கள். சைதன்யகொடியே உன்னை வாக்கால் துதிப்பவனை முனிவர்கள் உயர்த்திப் புகழ்கிறார்கள்.*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்’’

# பித்ரார்ஜிதம்

அல்பஸ்ருதன்

பிறப்பு, இறப்பு, மறுபிறவி, ப்ருத்வீ, அப்பு, அக்னி, வாயு ஆகாசம் ஆக ஐந்து மூலப்பொருள்கள் உண்டாக்கப்பட்டன. முதலில் அன்னமய, ப்ராணமய, மனோமய விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்கள் உண்டாக்கப்பட்டன. இவற்ரை சங்கரர் உபாதிகள் என்பார். ராமானுஜர் விசேஷணங்கள் என்பார். ஆன்மாக்கள் பல. அவை ப்ரம்மத்தின் சித். அதனின்று வேறானவை அல்ல. தீயினின்று வரும் பொறிகள் போல பிறந்தவை. ஆன்மா ப்ரம்மத்தின் அம்சம். ப்ரம்மத்திற்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவு முழுமைக்கும் உறுப்புகளுக்கும் உள்ள உறவு. சந்தன மணம் போல் தீபத்தின் ஒளி போல் உடல் முழுதும் ஆன்மா பரவியுள்ளது. ஆன்மா ப்ரம்மத்தின் சரீரம் என்பார் ராமானுஜர். கர்மம் செய்வதற்கே ஆன்மாக்கள் உள்ளன.

ஆன்மாவுக்கு பிறப்பு, இறப்பு இல்லை. கடைசி காலத்தில் அனைத்தும் ப்ரம்மத்துக்குள் ஒடுங்கும். புண்யம் செய்த ஆன்மாக்கள் ஸ்வர்கம் போய் இன்பம் துய்த்து புண்யம் தீர்ந்தவுடன் மண்ணில் பிறக்கும். பாபம் செய்த ஆன்மாக்கள் நரகம் சென்று துன்பம் துய்த்து மண்ணில் பிறக்கும். விண்ணிலிருந்து விழும் மழைத்துளி ஆகி மண்ணில் மாந்தர்க்கு உணவு ஆகி ஆடவர் உடலில் வீர்யமாகி பெண்டிருடலில் கருவாகி மனிதப்பிறவி எடுப்பார்கள். ப்ராரப்த கர்மங்களை அனுபவிக்க புதுப்பிறவி எடுப்பர், புல், பூண்டு, மரம், பக்ஷி விலங்காகவும் பிறப்பார்கள்.

பரமாத்ம ஸ்வரூபம் பரமாத்மாவின் உருவம் என்ன? ப்ரம்மத்தை புருஷோத்தமனென்றும் பக்தனை ஜீவோத்தமன் என்றும் கூறலாம். ஆண்டான் அடிமை உறவு என்பார் மத்வாசார்யர். உருவம் அற்றதாயும், உள்ளதாயும் சொல்லப்பட்டாலும் ப்ரம்மம் ஒன்றுதான்.

நீர் ஆகாரம் என்றால் உலக உருவங்கள் அற்றவர், நிர்குணர் என்றால் ஹேயகுணங்கள் அற்றவர், ஸ ஆகாரம் என்றால் திவ்ய உருவம் உடையவர் ஸகுணம் என்றால் கல்யாண குணங்களைக் கொண்டவர் என்று பொருள் கொண்டார் ராமானுஜர். உலக மரபுகளால் அவரை வர்ணிக்க இயலாது, வடிவை நினைக்க முடியாது, உவமை சொல்ல முடியாதவர், வாக்குக்கும், மனதுக்கும் எட்டாதவர். ஆகையால் அத்வைதம், நிர்குணம், நிராகாரம் நிராமயம் என்பார் சங்கரர்.

பரமாத்ன ஸ்வரூபம் அதன் படைப்புகளால் தெரிந்துகொள்ள வேண்டியதே. நம் கர்மங்களுக்கு அவர் பலன் தருவதால் நம் முயற்சிகள் அவரை நோக்கியே இருக்கவேண்டும். வெவ்வேறு நூல்கள் வெவ்வேறு விதமாகக் காட்டுவதன் நோக்கம் அனுபவங்கள் வெவ்வேறானவை. ஞானத்தில் நாட்டமுடையவர்க்கு ஞானவடிவாகவும், வேள்வியில் நாட்டமுடையவர்க்கு வேள்வி வடிவாகவும், பக்திமார்கங்களுக்கு அவதார ரூபமாகவும் காக்ஷியளிப்பவர். பகவானின் லீலை, ரஸங்கள் அனேகம். அவைகளில் ஏதாவதொன்றை த்யானிப்பது அதிலேயே ஊறியிருப்பது ஸாதனம்.

இதை உபனிஷத்கள் வித்யை எனும். ப்ராணவித்தை, வைஸ்வானர வித்தை தஹரவித்தை பஞ்சாக்னி வித்தை, மதுவித்தை இப்படி பல வித்தைகளைப் பேசும். இவை ஈசனில் ஆன்மா லயிப்பதைப் பேசும். கர்மமா, ஞானமா, பக்தியா என்றால் இவை மூன்றில் கர்மமே சிறந்தது என்பார் ஜைமினி. புருஷோத்தமனைத் துதிக்கவே ஞானம். வஸிஷ்டர் ஜனகர் ஞானம் பெற்ற பின்னும் கர்மாக்ளைச்செய்தனர் என்பார்.

ப்ரம்ம ஞானம் பெற்றவன் க்ரியை செய்ய கடமைப்பெற்றவன் என்பார் ஆபஸ்தம்பர். யாவஜ்ஜீவம் அக்னிஹோத்ரம் செய் என்கிறது. வேதம் ஞானமே கர்மத்தைவிட சிறந்தது என்று ப்ரஹதாரண்யகம் கூறும். ஜனகர் ஞானியாயிருந்த பின்னும் கர்மம் செய்தார். சுகர் கர்மத்தை விட்டார். இரண்டுக்கும் ஆதாரம் உபனிஷத்திலுண்டு. கர்மம் மோக்ஷத்துக்கு அல்ல, ஸன்யாசிகளுக்கு யாக கார்யங்களுக்கு விலக்கு அளித்துள்ளதே. குதிரை போன்றது கர்மம். போய் சேர்ந்தபின் குதிரை தேவையில்லை. ஞானத்தின் பலன் மோட்சம். பக்தியின் பலன் பரமாத்ம அனுக்ரஹம். ஞானி மரண காலத்தில் புண்ய பாபங்களிலிருந்து விடுபடுகிறான். முக்திபெறும் வரையில் ஸ்ரவண, மனன, நிதித்யாஸங்களை செய்ய வேண்டும். ப்ராரப்தத்தை அனுபவித்தே ஆகவேண்டும்.

ஜீவப்ரம்ம ஐக்யம் ஞானியின் ஆன்மா இவ்வுடலை விட்டபின் அர்சராதி மார்கத்தில் போகும். இவ்வண்டத்தைக் கடந்து ஏழு லோகங்களைக் கடந்து செல்கிறான். புராணங்கள்படி தேவர்கள் வழி நடத்த பரமாத்மாவை அடைவான். அவனுக்கு ஸ்வரூப விளக்கம் ஏற்படுகிறது. ப்ரம்ம குணங்களுடன் ப்ரகாசிக்கிறான். ஸங்கல்பத்தால் தன் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்கிறான். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் தவிர எல்லா அதிகாரங்களும் பெறுகிறான்.

(தொடரும்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

**விதுர: பாண்டவ்ஸ்ரேஷ்டமிதம் வசனமப்ரவீத்ந**
**கக்ஷக்ன; சிசிரக்னச்ச மஹாகக்ஷே பிலௌகஸ;**
**ந தஹேதிதி சாத்மானம் யொ ரக்ஷதி ச ஜீவதி ந**
**அனுஸிக்ஷயானுகம்யைதான் விதுர; ப்ரயயௌ க்ருஹான் ॥**

*விதுரர் யுதிஷ்டிரனிடம் கூறினார் காட்டுதீ கனென்று எழும்போது கூடுகளில் உள்ள ஜந்துக்கள் பாதிக்கபடுவதில்லை என்று சங்கேதமாகக் கூறி சிறிது தூரம் அவர்களுடன் சென்று தன் வீடு சேர்ந்தார்.*

**ஸத்க்ருதாஸ்சைவ பௌரைஸ்தே பௌரான் ஸத்க்ருத்ய ச**
**அலங்க்ருதம் ஜனாகீர்ணம் விவிசுர்வாரணாவதம் ॥**

*பரஸ்பரம் கௌரவிக்கப்பட்டு பாண்டவர்கள் அலங்கரிக்கப்பட்ட அந்த வாரணாவதத்தினுள் ப்ரவேசித்தனர்.*

**தேப்யோ பக்ஷ்யானி பானனானி சயனானி சுபானி ச**
**ஆஸனானி ச முக்யானி ப்ரததௌ ஸ புரோசன:**
**நிவேதயாமாஸ க்ருஹம் சிவாக்யம் அசிவம் ததா ॥**

*அவர்களுக்கு உணவுகளையும் பானங்களையும் படுக்கைகளையும் ஆஸனங்களையும் புரோசனன் தந்தான். பின்பு அசிவமாயுள்ள 'சிவம்'' எனும் க்ருஹத்தைக் காண்பித்தான்.*

**விதுரஸ்ய ஸுஹ்ருத்கஸ்சித் கனக: குசல; க்வ்சித்**
**சக்ரே ச வேஸ்மனஸ்தஸ்ய மத்யே நாதிமஹத்பிலம் ॥**

*விதுரரின் நண்பனும் சிறந்த சுரங்க நிபுணனுமான கனகன் வீட்டின் மத்தியில் ஒரு சுரங்கப் பாதை அமைத்தான்.*

**தத்ர தே ஸாயுதாஸ்ஸர்வே வசந்தி ஸ்ம க்ஷபாம் (ன்ருப)**
**விஸ்வஸ்ததவிஸ்வஸ்தா வஞ்சயந்த: புரோசனம் ॥**

நம்பிக்கை இருப்பதுபோலும் இல்லாததுபோலும் அங்கு இரவை ஆயுதங்களுடன் கழித்தனர்.

**அத ப்ரவாதே துமுலே நிசி ஸுப்தே ஜனே ததா**
**ததுபாதீபயத் பீம: சேதே யத்ர புரோசன: ।।**

மக்கள் தூங்கியிருக்கும்போது பெரும் சண்ட மாருதம் அடிக்க பீமன் புரோசனன் இருக்கும் இடத்தில் தீயை வைத்தான்.

**ஞ்யாத்வா து தத்க்ருஹம் சர்வமாதீப்தம் பாண்டு நந்தனா:**
**பிலேன தேன நிர்கத்ய ஜக்முர்மாத்ரா பரந்தபா: ।।**

அந்த வீடு முழுவதும் எரிந்ததாகத் தெரிந்துகொண்டு பாண்டவர்கள் தம் அன்னையுடன் சுரங்கத்தின் வாயிலாக வெளியேறினர்.

**தத: ப்ரவாஸிதோ வித்வான் விதுரேண நரஸ்ததா**
**பார்தானாம் தர்சயாமாஸ நாவம் விஸ்ரம்பபி: க்ருதம்**
**தாரயித்வா ததோ கங்காம் யதாகதமகாத் ஸ: ।।**

விதுரரால் அனுப்பபட்ட ஒருவன் அவர்களை படகில் ஏற்றி கங்கையைத் தாண்டி அவர்களை விட்டுவிட்டு தானும் வந்த வழியிலேயே போனான்.

**கங்காமுத்தீர்ய வேகேன பீமசேனோ மஹாபல:**
**ஆதாய குந்தீம் ப்ராத்ரூன் ச ஜகாமாசு ச பாவனி: ।।**

வேகத்துடன் பீமன் கங்கையைத்தாண்டி குந்தியையும் சகோதரர்களையும் தூக்கிக்கொண்டு நடந்தான்.

**அதாம்பிகேயஸ்ஸாமாத்ய; ஸகர்ணச்ஸஹஸௌபல;**
**ஸாத்மஜ: பார்தா நாசஸ்ய ஸ்மரம்ஸ்தத்யம் ஜஹர்ஷ ச ।।**

உண்மையிலேயே பாண்டவர்கள் இறந்தனர் என்பதைக் கேட்ட அரசனும் அமைச்சர்களும் சகுனியும் துர்யோதனனும் கர்ணனும் மகிழ்ந்தனர்.

**பீஷ்மச்ச துர்தர்ஷோ (ராஜன்) விதுரஸ்ச மஹாமதி:**
**ஜஹ்ருஷாதே ஸ்மரந்தௌ தௌ ஜாதுஷாக்னேர் விமோசனம் ।।**

அவர்கள் அரக்கு மாளிகையிலிருந்து தப்பினர் என்று கேட்ட பீஷ்மரும் விதுரரும் மகிழ்ந்தனர்.

**த்ரோணாதயஸ்ச தர்மைஸ்து தேஷாம் தான்மோசிதான் விது:**
**அன்யே ஜனா வடஹ்ந்தி ஸ்ம தக்ய்ஹா ஜீவந்தி வா ந வா ॥**

தர்மம் அவர்களைக் காப்பாற்றும் என்று த்ரோணர் முதலியவர்கள் நம்பினர். பாமர மக்களோ அவர்கள் கொளுத்தப்பட்டிருக்கலாம். ஜீவிக் கின்றனரா இல்லையா என்று விளங்கவில்லை என்றனர்.

**ததோ பீமோ வனம் கோரம் ப்ரவிஸ்ய விஜனம் மஹத்**
**தத்ர நிக்ஷிப்ய தான் ஸர்வான் ஜஜகார ஸ்வயம் ததா ॥**

மக்களில்லாத அவ்வனத்தில் அவர்களை எல்லாரையும் இறக்கி வைத்துவிட்டு பீமன் மட்டும் விழித்திருந்தான்.

(தொடரும்)


**"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்**
அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் ,
4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம்,
7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# ஹிந்து மத ப்ராமண நூல்கள்

ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா

## வேதாங்கங்கள்

**உபாங்கங்கள்** மேலே சொன்ன ஆறு அங்கங்களுக்கும் ஸாதகமான அங்கங்கள் உள்ளன. அவைகளே உபாங்கங்கள். அவை புராணம், ந்யாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்த்ரம் என நாலு வகைப்படும். புராணங்கள் ஜகத்ஸ்ருஷ்டி, அரசர்வம்சம், பெரிய அரசர்களின் சரித்ரம், மன்வந்த்ரம் முதலியவைகளை விளக்கும். ப்ராம்மம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், அக்னேயம் பவிஷ்யம், ப்ரம்ம வைவர்த்தம், லைங்கம், வாராஹம், ஸ்காந்தம், வாமனம், கௌர்மம், மாத்ஸ்யம், காருடம், ப்ரம்மாண்டம் என்று பதினெட்டு புராணங்களை வ்யாசர் இயற்றினார். இவை தவிர உபபுராணங்களாக சில மகரிஷிகளால் இயற்றப்பட்டுள்ளன.

**ந்யாயம்** இந்த சாஸ்த்ரம் கௌத மரிஷியால் ஐந்து அத்யாயங்களாக இயற்றப்பட்டது. ப்ரமாணம் முதலிய பதினாறு பதார்த்தங்களின் தத்வத்தை அறிவதே இச்சாஸ்த்ரத்தின் பலன். வைசேஷிகம் கணாதர் என்பவரால் இச்சாஸ்த்ரம் எழுதப்பட்டது. அதி த்ரவ்யம் முதலிய ஆறு பதார்த்தங்களின் தத்வம் கூறப்பட்டுள் ளது. இவ்விரண்டையும் தர்க்க சாஸ்த்ரமென்பர். இவ்விரண்டு பேருடைய ஸூத்ரங்களைத் தழுவியும் தழுவாமலும் பல மஹான்கள் க்ரந்தங்களை வெளியிட்டனர். இச்சாஸ்த்ரம் ஒவ்வொரு பொருளின் உண்மையையும் விளக்க இன்றியமையாதது. ப்ரத்யக்ஷம், அனுமானம், உபமானம், சப்தம் முதலிய ப்ரமாணங்களுக்கு விரிவாக இதில் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

**மீமாம்ஸை** : மீமாம்ஸை என்றால் கௌரவமாக விசாரிப்பது என்று பொருள். ஈஸ்வரனால் அனுக்ரஹிக்கப்பட்ட அபொருஷேயமான வேதத்தைப் பற்றி விசாரிப்பதால் இப்பெயர் பொருந்தும். கர்மமீமாம்ஸை, சாரீரக மீமாம்ஸை என்று இது இருவகைப்படும். கர்ம மீமாம்ஸை ஜைமினி மகரிஷியினால் 12 அத்யாயங்களில் எழுதப்பட்டது. இதில் கர்மலட்சணம் எம்மந்த்ரத்தை எங்கே படிப்பது, ஊஹம், கர்மாவைப் பற்றி பல தத்வங்கள், கர்மபலம் முதலியவை

*கூறப்பட்டுள்ளன. ஸாங்கர்ஷண காண்டம் என்று தேவதா ஸ்வரூபங்களை விளக்கி மற்றும் ஒரு சாஸ்த்ரம் எழுதப்பட்டுள்ளது. தேவதைகளை உபாஸித்தலும் கர்மாவாதலால் அது கர்ம காண்டத்தில் சேர்ந்ததாகும்.*

**சாரீரக மீமாம்ஸை :** *வ்யாஸ மகரிஷியால் உபனிஷதர்த்தங்களை ப்ரம்மஸூத்ரம் எனும் நூலில் நான்கு அத்யாயங்களில் தொகுக்கப்பட்டது. அதற்கு அத்வைதபரமாக ஸ்ரீசங்கரராலும், சிவாத் வைதபரமாக ஸ்ரீ நீலகண்டசிவாசார்யாராலும், விசிஷ்டாத்வைதபரமாக ஸ்ரீராமானுஜராலும், த்வைதபரமாக ஸ்ரீமத்வராலும் பாஷ்யம் செய்யப்பட்டுள்ளது. இதில் ப்ரம்மலக்ஷணம், ஜீவலக்ஷணம், ஜகத் ஸ்ருஷ்டி, மாயாமந்தம், மாயா நிவர்த்தி, அதற்கு மார்கம், சமதமாதிகள், ஜீவன் லோகாந்தரம் செல்லுதல், ஸகுண, நிர்குணப்ரம்மம், ஜீவன்முக்தி அதன் லட்சணம், மகாவாக்யம் முதலிய விஷயங்கள் செறிந்து விளங்குகின்றன. பக்தி, கர்ம மார்கங்களால் பெறும் சுகம் சாஸ்வதமன்று. புண்யமுள்ளவரையில்தான் இந்த்ரலோகம் முதலிய சுகம் கிட்டும். புண்யம் குறைந்தால் பூலோகத்தில் பிறக்கவேண்டும். பிறப்பவனுக்கு இறப்பு இயற்கையே. இவ்விரண்டுமில்லாத சாஸ்வத சுகம் பெறவேண்டும். அதற்கு ஸாதனம் வேதாந்தமே. அது தோன்றியது இன்னாட்டிலேயே. உபனிஷத்கள் இதைக்கூறும். தசோபனிஷத் என்று பத்து தலையாயன. இவை ப்ரம்மத்தை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ கூறும். இதுவே சாரீரக மீமாம்ஸை.*

*[தொடரும்]*

---

**மாத்ரு நிந்தா மஹாவ்யாதி:**
**பத்ரு நிந்தா பசாசத:**
**தைவ நிந்தா தரித்ர்யாஸ்து**
**குரு நிந்தா கல ஷயம்.**

தாயை நிந்தனை செய்வதால் கரும் வ்யாதி வரும்
தந்தையை நிந்தனை செய்வோர் பசாசமாகிறார்கள்
தெய்வத்தை நிந்தனை செய்வதால் தரித்ரம் வரும்,
குருவை நிந்தனை செய்தாலோ குலமே அழிந்துவிடும்..

-- நீதிசாஸ்த்ரம்.

# பக்தியே பெரிய லக்ஷ்மி

'இதைத் தா, அதைத் தா' என்று நாம் பிரார்த்தக்க வேண்டியதே இல்லைதான். நம் யோக்கியதைக்கு என்ன தர வேண்டும் என்று அம்பாளுக்கே தெரியும். இருந்தாலும் நடைமுறையில் இப்படி விவேகத்தோடு இருக்க முடிய மாட்டேன் என்கிறது. 'இது வேண்டும், அது வேண்டும்' என்பதற்காகத் தான் பிரார்த்தனை செய்கிறோம்.

யோசித்துப் பார்த்தால் இதை அடியோடு தப்பு என்று சொல்ல முடியவில்லை. கீதையில் பகவான் பக்தர்களை நாலு தினுசாகப் பிரித்துச் சொல்கிறார். அதிலே மோக்ஷத்தை விரும்பி உபாஸிக்கிற சாதகன், அந்த மோக்ஷ லட்சியத்தையே பிடித்துவிட்ட ஞானி ஆகிய இரு சாராரைச் சொன்னதோடு பகவான் நின்று விடவில்லை. நோய் நொடி முதலான துன்பங்கள் நீங்குவதற்காகப் பிரார்த்திக்கிறவன், பொருளை வேண்டிப் பிரார்த்தனை பண்ணுகிறவன் ஆகிய இருசாராரைக்கூடச் சேர்த்து கொள்கிறார். இம்மாதிரி லௌகீக சௌக்கியத்துக்காக வழிபடுகிறவர்கூடத் தன்னை பூஜிப்பதாக பகவான் ஒப்புக் கொள்கிறார். பகவானே ஒப்புக் கொண்ட விஷயத்தை நாம் ஆட்சேபிப்பதற்கில்லை.

ஆனால் கீதா சாஸ்திரம் முதலிய எந்த ஞான நூலாகட்டும், சமய கிரந்தமாகட்டும், இகலோக சௌக்கியங்களைத் தள்ளிவிட்டு, சாசுவதமான பேரின்பத்தைத்தான் நாட வேண்டும் என்பதை லட்சியமாக வலியுத்துகின்றன. அப்படியானால் பகவானே முரண்படப் பேசுகிறாரா? அப்படி அர்த்தமில்லை. லௌகிக காரியங்களை எடுத்த எடுப்பில் யாராலும் விட்டுவிட முடிகிறதில்லை. ஆனாலும் இந்த நிலையில் இருக்கிறபோதுகூட, 'எல்லாம் நம்மாலேயே முடியும், நாம் நினைத்ததை எல்லாம் நாமே ராஜாவாக நடத்திக் கொள்ள முடியும்' என்ற நினைத்து விடாமல், 'நமக்கு மேலே ஒரு மகாசக்தி இருக்கிறது. அதற்குச் சக்தி இருப்பதோடு கருணையும் இருக்கிறது. நாம் தழைந்து வேண்டினால் அது அனுக்கிரகம் பண்ணும்' என்கிற நம்பிக்கை இருந்தால், அது விசேஷம்தானே? பணம் வேண்டும், வீடு வேண்டும், பதவி வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்கிறபோதுகூட, இப்படி ஒரு மகாசக்தியிடம் நம்பிக்கை வைத்து, அதனிடம் நம் அகங்காரத்தையெல்லாம் தாழ்த்திக் கொண்டு நிற்கிறோம் அல்லவா? அந்த மட்டில் இது நாஸ்திகத்தைவிட எத்தனையோ சிலாக்கியம்தானே? முதலில் ஏதேதோ வஸ்துக்களுக்காகப் பகவானிடம் போகிறோம். பூஜை, ஆலய தரிசனம், ஸ்தோத்திரம், ஜபம் என்று செய்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக இதுகளில் பிடிப்பு உண்டாக உண்டாக, மற்ற

வஸ்துக்களில் பிடிப்புக் குறைகிறது. கடைசியில் பகவானுக்காகவே பகவானைப் பக்தி பண்ண வேண்டும் என்கிற ருசி பிறக்கிறது.

அதனால்தான் லக்ஷ்மீ கடாக்ஷத்தை விரும்பியே பக்தி செலுத்துகிறவர்களைக்கூட, 'அர்த்தார்த்தி' என்று தனியாகச் செல்லி, தன்னைப் பூஜிப்பவனாக பகவான் ஒப்புக் கொள்கிறார்.

'ஆசைக்கோர் அளவில்லை' என்றார்கள். முக்கியமா செல்வம் வேண்டும் என்கிற ஆசைக்கு எல்லையே இல்லாமல் போய் விடுகிறது. இதனால்தான் அனர்த்தம் எல்லாம் வந்து விடுகிறது. ஞானம் வேண்டும், குணம் வேண்டும் என்றெல்லாம் பிரார்த்திக்கிறவர்கள் எங்கேயாவது துர்பலமாக இருப்பார்களோ என்னவோ? லக்ஷ்மீகடாக்ஷத்துக்கு மட்டும் பிரார்த்திக்காதவர் இல்லை. இதிலே எந்தக் கோடீசுவரனுக்காவது திருப்தி வந்திருக்குமா என்றால் அதையும் காணோம்.

சௌக்கிய அனுபோகம் அதிகமாக ஆக, ஞானம் வேண்டும் என்ற எண்ணம் குறைந்து கொண்டே போகிறது. இதனால் தான் லக்ஷ்மி இருக்கிற இடத்தில் ஸரஸ்வதி இருப்பதில்லை என்று பொதுவில் வசனம் வந்து விட்டது. இதற்கு வேடிக்கையாக ஒரு காரணம் தோன்றுகிறது. சாதாரணமாக மாமியாரும் மாட்டுப் பெண்ணும் ஒரே இடத்தில் ஒத்து இருக்க மாட்டார்கள். மஹாவிஷ்ணுவும் பிரம்மாவும் தகப்பனாரும் பிள்ளையும் ஆகிறார்கள் என்றால், அப்போது மஹாலக்ஷ்மியும் ஸரஸ்வதியும் மாமியார் - மாட்டுப் பெண் ஆகிறார்கள். இவர்கள் சேர்ந்து சௌஜன்யமாக இருக்க மாட்டார்களே! அதனால் தான் பொதுவில் லக்ஷ்மீ கடாக்ஷம் இருக்கிற இடத்தில், ஸரஸ்வதி கடாக்ஷம் இருப்பதில்லை அல்லது இதையே நல்லபடியாகச் சொல்லலாம். மாமியாரிடம் உள்ள மகா மரியாதை காரணமாகவே, அவள் இருக்கிற இடத்தில் தான் முந்திரிக் கொட்டை மாதிரி செய்யக் கூடாது என்று ஸரஸ்வதி ஒதுங்கிப் போவதாகவும் சொல்லலாம்.

இதெல்லாம் வேடிக்கையாகச் சொல்கிற பேச்சு. வாஸ்தவத்தில் இருக்கிறது ஒரு பராசக்திதான். அவள்தான் எந்தெந்தச் சமயத்தில் எந்தெந்த விதமாக அனுக்கிரகம் செய்து பக்குவத்தைத் தர வேண்டுமோ, அப்படிச் செய்வதற்காக மஹாலக்ஷ்மியாக, ஸரஸ்வதியாக, ஞானாம்பிகையாக வருகிறாள். ஏதோ ஒரு ரூபத்தில் பக்தி என்று வைத்து விட்டால் போதும். அப்புறம் நடக்க வேண்டியதை அவளே பார்த்துக் கொள்வாள். இந்தப் பக்திதான் நமக்குப் பெரிய செல்வம்; அதுவே பெரிய லக்ஷ்மி!

-

**- அருள் உரை**

# பிரஹ்லாதர் அஸுரக் குழந்தைகளுக்குச் செய்த உபதேசம்

திதிதேவியின் குமாரர்களே! பரமார்த்த விஷயத்தை உங்களுக்கு சொல்கிறேன். கேளுங்கள். இதை பொய்யாகக் கருதாதீர்கள். பேராசை முதலிய காரணங்களால் நான் சொல்லவில்லை. ஸகல ஜந்துக்களுக்கும் முதலில் ஜனனம், பின்பு பால்யம். அதற்குப்பின் யௌவனம் பின்பு தடையின்றிக் கிழத்தனமும் வருகின்றது. அதன்பிறகு மரணமடைவதையும் நாமனைவரும் தினந்தோறும் பார்க்கிறோம். இறந்தவன் மறுபிறப்பையடைவது சாஸ்திரஸம்மதமாகும். இது புத்திக்கும் பொருத்தமானது. காரணமின்றிக் காரியமுண்டாகுமா. புனர் ஜன்மத்தில் கர்பவாஸ துக்கத்தை அனுபவித்தே தீர வேண்டும். ஆகவே ஸமஸ்த அவஸ்தைகளிலும் துக்கந்தான் என்பதை அறியுங்கள். பசி தாகதுக்கத்தைப் போக்கடிக்கும் ஆகாரத்தையும் சீதாதிகளைப் பரிஹரிக்கும் உடையையும் அக்ஞன் ஸுகமென்று எண்ணுகிறான். ஆனால் அது துக்கமே அன்றி வேறல்ல. உதாரணமாக தேஹம் மிகவும் ஜடமாகி வேலை செய்யமுடியாதவனுக்கு சிரமப்பட்டு ஸஞ்சாரம் செய்வதே ஸுகமாகத் தோன்றுகிறது. அதுபோல் விபரீத ஞானத்தால் உண்மை அறியாதவர் துக்கத்தையே ஸுகமாக எண்ணுவர். ஸகல விதமான அசுத்திகளின் சேர்க்கையே உருவம்கொண்ட தேஹமெங்கே? காந்தி சோபை ஸௌந்தரியம் மனோஹரமாயிருப்பது இவை எங்கே? தேஹத்தை நாம் அப்படி எண்ணுகிறோம். மாம்ஸம் இரத்தம் மூத்ரம் வீஷ்டை நரம்புகள் கொழுப்பு எலும்பு இவைகளின் கூட்டமே தேஹம். இதில் பிரீதிவைப்பவன் நரகத்திலும் பிரீதி வைப்பான். அக்நியானது சீதகாலத்தால் ஸுகமாகத் தோன்றுகிறது. தாஹத்தால் ஜலமும், பசியால் அன்னமும் அப்படியே ஸுகமாகத் தோன்றுகின்றன. விபரீதத்தால் விபரீதம் தோன்றுகிறது. அதாவது உஷ்ணகாலத்தில் அக்னி துக்கமாயும் பசிதாகமில்லாதவனுக்கு அன்ன பானம் துக்கமாயும் தோன்றுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு 'நம்முடையது' என்று விஷயங்களை பரிக்ரஹம் செய்கிறோமோ அவ்வளவும் துக்கம். மனதுக்குப் பிரியமென்று வஸ்துக்களில் எத்தனை ஸம்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்கின்றோமோ அத்தனை முளைகளை சோகத்துக்கு அடிக்கிறோம்.

ஜன்மத்திலும் சாவிலும் யமதண்டனைகளிலும் கர்பவாஸத்திலும் துக்கமே தவிர ஸுகலேசமில்லை. இருந்தால் சொல்லுங்கள்! இவ்விதம் ஸகல துக்கத்துக்கும்

ஆதாரமான இந்த ஸம்ஸாரஸமுத்ரத்தில் ஸ்ரீ விஷ்ணு ஒருவரே கதி. நாங்கள் குழந்தைகள் என்று எண்ணாதீர்கள் ஏனெனில் தேஹங்களிலுள்ள ஜீவன் அனாதி சாச்விதன் பால்யம் யௌவனமெல்லாம் தேஹத்தைக் குறித்தது.

நான் குழந்தை யௌவனம் வந்தபின் சிரேயஸுக்குயத்னம் செய்வேன். நான் யுவா, கிழவனானபின் சிரேயோமார்க்கத்தைத் தேடுவேன். நான் கிழவன் மனத்திற்கு தத்துவங்கள் பிடிபடவில்லை. உடம்பு திடமாயிருந்தபோது செய்யவில்லையே என்று சொல்லிக் கொண்டு இந்த மனிதன் சித்த சாஞ்சல்யத்தால் ஒருபோதும் சிரேயோ மார்க்கத்தை எட்டிப் பார்ப்பதில்லை. பால்யத்தில் விளையாட்டிலும் யௌனத்தில் ஸ்திரீ முதலிய விஷயங்களிலும் விருத்தாப்யத்தில அசக்தியாலும் காலத்தைப் போக்குகின்றனர். அதனால் பால்யத்திலேயே க்ஷேமத்திற்கு பிரயத்னம் செய்ய வேண்டும். ஆத்மாவுக்கு பால்யாதி அவஸ்தைகள் கிடையாது. நான் சொல்வது ஸத்யம் ஆதலால் பந்தமோக்ஷத்தைக் கொடுக்கும் ஸ்ரீ விஷ்ணுவை நினையுங்கள். ஸ்மரணத்தில் ஒரு சிரமமும் இல்லை. நினைத்த மாத்திரத்தால் பாபங்கள் நசிக்கின்றன. க்ஷேமம் ஏற்படுகிறது. ஸர்வபூதங்களுக்கு அந்தர்யாமியான அவனிடம் மனதை நிறுத்துங்கள். ஸமஸ்தகிலேசங்களும் நிவர்த்தியும். உலகில் அனைவரும் தாபத்ரயத்தால் தபிக்கின்றார்கள். அவர்களில் அநுதாபம் செய்யவேண்டியிருக்க யார் துவேஷிப்பார். ஒருவேளை இதரர்கள் சக்தியுடையவராக இருந்து நாம் சக்தி இல்லாதவராக இருந்தாலும் மற்றவரை துவேஷிக்கலாகாது சந்தோஷப்பட வேண்டும். துவேஷம் ஹானியைக் கொடுக்கும். இதரர் நம்மை துவேஷித்தால் ஐயோ! பாவம்! அவர்கள் மிகவும் துக்கிக்கத்தக்கவர் என்று நாம் உணரவேண்டும்.

சுருக்கமாகச் சொல்கிறேன் கேளுங்கள்! ஸமஸ்த உலகும் விஷ்ணுவின் விஸ்தாரமேயல்லாது வேறல்ல. ஆதலால் ஸமஸ்த ஜீவராசிகளையும் நாமாக உணர வேண்டும். ஆதலால் நாமனைவரும் பகவானிடம் மனதை வைப்போம். இந்த ஸம்ஸாரத்தில் ஏற்படும் ஸுகத்தால் சந்தோஷிக்காதீர்கள். நான் உருதியாகக் கூறகிறேன். எல்லா விஷங்களிலும் ஸம புத்தியாக இருங்கள். ஸமபுத்தியே பகவானுடைய பூஜை. அவன் சந்தோஷித்தால் அல்பபலமான தர்மார்த்த காமங்கள் எம்மாத்திரம்? உயர்ந்த கைவல்யத்தையே அடைவீர்கள்.